விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 22 ஞாயிற்றுக்கிழமை (04.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

# தமிழ் மக்களுக்கான நீதி பொறிமுறையை அரசு உடன் முன்னெடுக்க வேண்டும்

## ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்து



(கொழும்பு)

இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களைக் கண்டறியவும், காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராய்ந்து தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை இலங்கை அரசு உடன் முன்னெடுத்தே ஆக வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித் ▶15

## வவுனியாவில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவரை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று ▶15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# பொலிஸில் முறையிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம்

## வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே



(கொழும்பு)

*காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது உறவுகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என வெளிவிவகாரச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.*

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளால் முன்வைக்கப்படுகின்ற பிரதான குற்றச்சாட்டுக்களான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனார் விவகாரம் உள்ளிட்டவற்றுக்கு வெகுவிரைவில் பதிலளிக்கப்படும் என்று இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேர்காணலில், காணாமல்போனதாகக் கூறப்படுபவர் ▶15

## கொரோனா 4 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர். ▶15

## நீதிமன்ற ஊழியருக்கு கொரோனா

# யாழ்.மேல் நீதிமன்றை முடக்குவதற்கு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரி பயிலுநர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து யாழ்.மேல் நீதிமன்ற வளாகம் முடக்கப்படுவது தொடர்பில் ஆலோ ▶15

## எழுமாற்று பிசிஆர் பரிசோதனையில்

## திருநெல்வேலி - பரமேஸ்வராச் சந்தியில்

# 4 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் நடத்தப்பட்ட எழுமாற்று பிசிஆர் பரிசோதனையில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். ▶15

# யாழ்ப்பாணத்தில் 7 பேர் உட்பட வடக்கில் 9 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 7 பேர் உட்பட வடக்கில் நேற்று 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த ஐவர் கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளாகியமை கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். ▶15

## காணாமல்போன உறவுகளுக்கு

# நஷ்டஈடு வழங்க தயார்

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

(கண்டி)

காணாமல்போன உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்க அரசு தயார் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அலு ▶15

# அரசுக்கு எதிரான போலி பிரசாரங்களை தோற்கடிப்போம்

## வவுனியாவில் ஜனாதிபதி கோட்டா

(வவுனியா)

கோட்டாபய ராஜபக்ஷ முக்கியமல்ல, என்னை இந்த இடத்துக்குக் கொண்டு வந்த கொள்கையும் பலமுமே முக்கியமானதாகுமென்று ▶15

## யாழில் முடக்க நிலையை நீக்கி வர்த்தகத்துக்கு அனுமதி தரவும் அரச அதிபரிடம் கோரிக்கை

12ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.கல்லுண்டாயில் இளைஞன் மீது தாக்குதல்

## மீட்க வந்த நண்பன் மீது கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் இளைஞன் ஒருவரை இனம்தெரியாத கும்பல் ஒன்று வழிமறித்து தாக்கியுள்ளது. ▶15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வைத்திய நிபுணர் சேவைகள்

யாழ். நகரில் 30 வருடங்களாக வைத்திய நிபுணர்கள் சேவை ஆற்றிவரும் சம்பந்தர் வைத்திய நிலையத்தில்.

- எல்லா வைத்திய நிபுணர்கள் சேவைகள்
- வைத்திய ஆய்வுகூட சேவைகளான இரத்தம் / சிறுநீர் பரிசோதனைகள் நடைபெறுகின்றன

(6452)



**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

இல. 08, இராமையாச் செட்டியார் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 873 0129, 021 222 7259**

## வெல்டர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஓட்டு வேலை செய்வதற்கு வெல்டரும் உதவியாளரும் தேவை.

சம்பளம் : வெல்டருக்கு 40,000/= இருந்து வழங்கப்படும்.
உதவியாளருக்கு 25,000/= இருந்து வழங்கப்படும்.

(6440)

**☎-074 049 0003**

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, மூளாய் வீதி, உடுக்கியவளை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

(6081)

**077 819 1314**

## சிறுபோகம் - 2021
## பகிரங்க ஏலம்

**ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்**

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம்

எமது ஆலயத்திற்கு சொந்தமான 20 1/4 (இருபதே கால் ஏக்கர்) வயல் காணி 2021.04.05 ஆம் திகதி (திங்கட்கிழமை) ஆலய மண்டபத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

- மருதநகர் - 2 1/4 ஏக்கர்
- பெரியபரந்தன் ( L B2 D/ 5 ) - 10 ஏக்கர்
- பெரியபரந்தன் ( D/ 6 ) - 8 ஏக்கர்

◈ ஏலத்தில் காணியைப் பெறுபவர் அன்றைய தினம் பி.ப 1.00 மணிக்கு முன்பு முழுத்தொகையையும் செலுத்த வேண்டும்.

◈ காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

ஆலய பரிபாலன சபை சார்பில்

| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

(C-1868)

## JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT

**Register Now**

Officer
**Diploma Certificate**
For Electronics Servicing Technician Course
In Repairing Laptops, TV, Radio, Cell Phones, Av Amplifiers and other electronic related Items

**Syllabus Based on NVQ**
இது ஒரு செயல்முறை பயிற்சி - Full Practical Oriented Mode
தமிழ்மொழி மூல விளக்கங்கள்

**Working people and G.C.E O/L Students are eligible apply**
**Duration : 300 Hrs weekend / weekdays**
**Starts on 10th April 2021, 10.30 a.m**
**Contact : 021 222 3382 / 077 844 5417**


**Next To Commercial Bank** — **No. 464, Hospital Road, Jaffna.**

(6441)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்

ஜனனம் : 31.10.1974 அஸ்தமனம் : 02.04.2021




கீழ்வானம் செக்கச் சிவந்துவர
ஆர்ப்பரித்து காற்று முட்டி மோதிட
என்ன விபரீதம் என கலங்கியவேளை
அன்புவின் மரணச் செய்தியானதுவே!

என்றுமே தளர்வில்லாது பல்லாயிரம்
மாணவர்க்கு நல்லாசானாத் திகழ்ந்திட்ட
நர்த்த வித்தகனே எம் நண்பா
மீளாத உன் துயில் எமை வாட்டுதையோ!

கலாசாலையில் பயின்ற காலத்தின் நட்பு
தொடராய் உன் பெருமை சொல்லி மகிழ்ந்திருந்தோம்.
அவசரமேன் விண்ணுலகம் சென்று விட
விடைபகிர்வார் யாருள்ளார் தேடுகிறோம்!

கட்டுழைப்பின் சின்னமென அன்பொளியின் - நாயகனே
தேசமே புகழ் மாலை சூடி வாழ்த்தியவேளை
உனை இழந்து விட்டோமையா அன்பழகா!
எப்பிறப்பில் இணையும் பாக்கியத்தைப் பெறுவோம்?

இறைவா உனை இறைஞ்சுகின்றோம்.
ஜீவிதத்தில் கைகோர்த்த நண்பனை
மரணத்தில் மறக்கமுடியாது தவிக்கின்றோம்.
எங்கள் நண்பனை உன் பாதக்கமலத்தில் ஏற்றுவிடு
இல்லையெனில் மீண்டும் எம்மிடத்தே தந்துவிடு.



**1999/2000**
**ஆரம்பக் கல்வி (A பிரிவு)**
**கலாசாலை உறவுகள்**


(6450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## K.T. இராஜசிங்கம்

### (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்)



யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கை பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட K.T இராஜசிங்கம் (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்) அவர்கள் 02.04.2021 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தங்கலட்சுமி தம்பதியரின் மருமகனும், மகாலட்சுமியின் அன்பு கணவரும், நிசாந்தன் (கனடா), சுசிதரன் (லண்டன்), நிறோஜி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலயக். கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), நிரோஜன் (முகாமைத்துவப் பணிப்பாளர் , DMI Computer Education) அவர்களின் அன்புத் தந்தையும், சந்திரலேகா(கனடா), அனுஷா(லண்டன்) சிவானந்தன்(நிர்வாக உத்தியோகத்தர், பேரவை செயலகம் ,வட மாகாண சபை) ,சுகன்யா( மென் பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,அக்ஷன்யா, ஹரிணி, சாருஹாஷ் ஆகியோரின் அன்பு பேரனும், பாக்கியம் (லண்டன்), அகிலேஸ்வரி, நல்லையா, கமலாதேவி, கந்தசாமி(லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (04.04.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகன கிரியைகளிற்காக எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தோற்றம் - 26.12.1944 மறைவு - 02.04.2021**

**இராமலிங்கம் வீதி , திருநெல்வேலி.** (6443) **தகவல் - குடும்பத்தினர்**

# வழமையை விட வெப்பநிலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் வழமையை விட 4 பாகை செல்சியஸ் வெப்பம் அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் அதி கூடிய வெப்ப நிலை பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


இந்த இரு மாவட்டங்களிலும் 36.8 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது. (நி-4)

# மரண அறிவித்தல்

## அமரர்.வேலுப்பிள்ளை அன்பழகன் (ஆசிரியர்)

(யா/செட்டித்தெரு அ.மி.த.க. பாடசாலை)

பிறப்பு 31.10.1974 இறப்பு 02.04.2021



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ். சிவகுருநாதர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அன்பழகன் 02.04.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் அன்பு இளைய மகனும், சுப்பிரமணியம்- நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், கவிதாவின் (ஆசிரியை-யா/இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும்,அனுராகன்(யா/இந்துக் கல்லூரி), கவிநயன் (யாழ் இந்து ஆரம்பபாடசாலை), சாருகானன்(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், பொன்னரியம்,துரைசிங்கம், பாலச்சந்திரன், இராஜேந்திரன்,செல்வராணி, ஞானச்சந்திரன், செல்வரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாம்பிகை, அப்புத்துரை, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சாந்தநிர்மலா, குணசிங்கம், விஜயநிர்மலா, கிருஷ்ணன், அமரசேகர்,ஞானசேகரன் ரஞ்சித் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.04.2021 மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் - குடும்பத்தினர்
தொடர்புக்கு - 077 656 9660 (6443)


# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 26 12 1944

இறப்பு 02 04 2021

அமரர்

**K.T.இராஜசிங்கம்**

*(ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்)*

DMI COMPUTER EDUCATION இன் முகாமைத்துவப்பணிப்பாளர் இராஜசிங்கம் நிரோசன் அவர்களின் தந்தையார் K.T. இராஜசிங்கம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-1875)

DMI COMPUTER EDUCATION
ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்
முன்னாள் வசிப்பிடமாகவும் நீராவியடி, யாழ்ப்பாணத்தை
தற்போதைய வசிப்பிடமாகக் கொண்டவருமான
யா/செட்டித்தெரு அ.மி.த.க பாடசாலை ஆசிரியர்

## அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்

பிறப்பு: 31.10.1974 இறப்பு: 02.04.2021



### அன்பின் ஒளிதீபம்
### வேலுப்பிள்ளை அன்பழகன்
### (மட்டுவில் வளர்மதி மக்களின் உள்ளக் குமுறல்)

மட்டுவில்மண் பெற்ற
மாபெரும் ஆசிரியர்
வளர்மதியில் பூத்து
வானம் தொட்ட வல்லவன்
ஆரம்ப கல்வியில்
ஆயிரம் மைல் கடந்து
சாதனைகள் பல படைத்த
சரித்திர நாயகன்,
மண்ணில் விதையான
மரணச் செய்தி!

மட்டுவிலிலும்
மத்தியிலும் (யாழ்)
பேரதிர்ச்சியுடன்
பேய் அடித்த மரண ஓலம்!
தண்ணீரென கரை புரண்டோடும்
கண்ணீர் மழையில்
மட்டுவில் வளர்மதி .....

சின்ன விழி அசைத்து வரும்
சிங்கார சிட்டுகளை
அள்ளி அணைத்து
அரிய கல்வி ஊட்டிடும்
அற்புத ஆசானுக்கு
நிகர் உண்டோ
நிதர்சனமான இவ்வுலகில் ?

எப்படி உருவானது இந்த
ஆசிரிய இமயம்?
விஞ்ஞான பிரிவில்
உயர்தரக் கல்வியின் பின்னர்

அன்புவின் ஆரம்ப ஆசிரியத்துவத்திற்கு
மட்டுவில் வளர்மதி கல்வி கூடம்
சுதந்திரத்தையும் வாய்ப்பையும்
வழங்க தன் ஆளுமையால்
வாரி அணைத்துக் கொண்டார்
மட்டுவில் சிறார்களை.
ஐந்தாறு வருடங்கள்
பரீட்சை பெறுபேறுகளால்
தன்னை நிரூபிக்க,
இவர் விரும்பியபடியே
ஆசிரிய நியமனமும் கிடைத்தது
பின்னர் இடப்பெயர்வு
யாழில் இவர் திறமையை
பறைசாற்ற கல்வியாளர்கள் பலரை
இவரது கற்பித்தல் நுட்பம் கவர
யாழ் இந்துவும் யாழ் உதயனும்
இவரது திறமையை அங்கீகரிக்க

இவரது சிறார்களின் தரம் 5
பெறுபேறுகளும் மாவட்ட ரீதியில்
சாதனை படைக்க மிகக் குறுகிய
காலத்தில் மாவட்ட ரீதியில்
கற்பித்தலில் உச்சம்
தொட ஆயிரக்கணக்கான்
சிறார்களின் பரீட்சை ஆளுமையை
வளப்படுத்தும்
கல்வி கூடமாக பரிணாம
வளர்ச்சி கண்டது அன்பொளி.

கால ஓட்டத்தில் தாய்த் தேச சேவைக்காக
சாவகச்சேரியிலும் கிளை பரப்பி
தென்மராட்சியிலும்
நேரடியாக கற்பித்தார்.
அதே சந்தர்ப்பத்தில்
வடக்கு, கிழக்கு, கொழும்பு என
எல்லா இடங்களிலும் இருந்தும்
நேரடி கற்பித்தலுக்கான
அழைப்பு கிடைத்தபோதும்
நேர வரையறையால்
கருத்தரங்குகளாலும்
அன்பொளி வினாத்தாள்
சேவையூடாகவும்
பத்திரிகைகள், புலமைசுடர்
வெளியீடுகளூடாகவும்
தேசிய சேவைகளை
விரிவுபடுத்திக் கொண்டார்.

முள்ளை முள்ளால்
எடுப்பது போல் சிறுவராக
மாறி சிறுவர்களுக்கு
கல்வி வைத்தியம் செய்யும்
உளவியல் வைத்தியமே
இவரது கற்பித்தல் நுட்பம்.
இவரது கற்பித்தல்
உத்தியில் கவரப்பட்டு
தரம் 5 பரீட்சையில்
சித்தி அடைந்து இன்று வைத்தியர்,
பொறியியலாளர் , கணக்காளர்கள்,
சட்டவாதிகள் போன்ற பல உயர்
பதவிகளில் பலர் உள்ளனர்.
இவர்களின் உச்சரிப்பிலும்
சிறார்களின் எண்ணங்களிலும்
மட்டுவில் மக்களின் மனதிலும்
அன்பு வடிவில் உன் ஆத்மா
காலம் உள்ளவரை குடி இருக்கும்.

**உன் பிரிவால் ஆறாத் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தாருக்கு
எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மட்டுவில் தெற்கு,
வளர்மதி உறவுகள்.

(6457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அனுமதியின்றிய "சினோபார்ம்" வேண்டாம்;

### இலங்கை மருத்துவ சபை விடாப்பிடி

(கொழும்பு)

தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியின்றி நாட்டில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்படக் கூடாது என இலங்கை மருத்துவ சபை சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மருத்துவ சபை சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சினோபார்ம் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயற்றிறன் மற்றும் நோயெதிர்ப்புத் திறன் குறித்து தீர்மானிக்க போதுமான தரவு தேவைப்படுகிறது.

தடுப்பூசிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்ததன் பின்னரே நாட்டில் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் பொது மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்குவதற்கு முன்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியும் பெறப்பட வேண்டும். அத்துடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக் கமைய, தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியுடன் மாத்திரமே நாட்டில் சினோபார்ம் தடுப்பூசி மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

## தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு பயிற்சி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 2019 ஆம் ஆண்டுக்காக வழங்க வேண்டிய கணக்காய்வு அறிக்கைகளை இதுவரை வழங்காத 4 கட்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால் உரிய கட்சிகளின் அங்கீகாரம் இரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வ பெயர் மத, இன அடிப்படையில் அமைந்துள்ளனவா? என்பது பற்றியும் ஆராயப்படவிருக்கிறது. இதுபற்றிய விசாரணைகளை மேற்கொள்ள தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் 5 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## ஜெனிவா யோசனை நிறைவேற்றம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த வெற்றி

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட யோசனை நிறைவேற்றப்பட்டமை வடக்கிலும் தெற்கிலும் கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்த வெற்றி என சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொட மேலும் தெரிவிக்கையில்,

இது பாதிக்கப்பட்டவர்களின் வெற்றியே அன்றி மேற்குலகம் செய்த சூழ்ச்சியாகக் கருத முடியாது.

அரசாங்கம் தற்போது செய்ய வேண்டியது மேற்குலகையும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் விமர்சிப்பதை விடுத்து வடக்கிலும் தெற்கிலும் அநீதிக்கு உள்ளானவர்களுக்கு நீதியை நிறைவேற்ற வேண்டும் எனவும் சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கட்டுப்பாட்டிற்குள் வர அனைத்து தரப்பின் ஒத்துழைப்பும் வேண்டும்

(சாவகச்சேரி)

சமூகத்தில் கொரோனாத் தொற்று எந்நேரமும் ஏற்படலாம். எனவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம் என சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன் தெரிவித்தார்.

மேலும் அவர்,

கொரோனா யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவி வருகிறது. தென்மராட்சி பிரதேசம் ஓரளவிற்கு இன்றுவரை தப்பித்துள்ளது.

எனினும் மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். சுகாதாரப் பிரிவு உள்ளிட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினருக்கும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் அங்காடிகள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் எந்நேரமும் தொற்று ஏற்படக் கூடிய அபாயநிலை காணப்படுகிறது.

எனவே பொதுமக்கள் மிக அவதானமாக சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-8-30)




# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம், தென்மராட்சி, மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சி, நெல்லிக்கிணத்தடி, தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெ. தில்லையம்பலக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-8)



சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் சிசில் ரெமின்டஸின் வேண்டுகோளிற்கு இணங்க நீர்கொழும்பு ஓரியண்ட் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் பிளசிடஸ் பீற்றரின் நிதிப்பங்களிப்பில் மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்திற்கு சக்கரநாற்காலி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (படம்:- சுபேசன்)

# இதுவரை பி.சி.ஆர்.மேற்கொள்ளாதவர்கள் நாளையதினம் வருகை தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட முடக்கப்பட்ட பகுதிக்கு உட்பட்ட வர்த்தகர்களுக்கும் ஊழியர்களுக்கும் நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நவீன சந்தைக் கட்டடத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28,29 ஆம் திகதிகளில் பி.சி.ஆர்.செய்தவர்களுக்கும் இதுவரை பி.சி.ஆர்.செய்யாதவர்களுக்கும் இந்தப் பரிசோதனை செய்யப்படும்.

28, 29 ஆம் திகதிகளில் செய்யப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்ட கடை உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் திங்கட்கிழமை நடைபெறும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு வருகை தர வேண்டாம் என்றும் அவர்களுக்கு பிறிதொரு தினத்தில் பி.சி.ஆர்.செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை எல்லைக்கு வெளியில் வதிவிடத்தைக் கொண்டவர்கள் அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் திங்கட்கிழமை நடைபெறும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு 500 பேர் மாத்திரமே உள்வாங்கப்படுவதோடு ஏனையோருக்கு தொடர்ச்சியாக அடுத்தடுத்த தினங்களில் பரிசோதனைகள் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-8-18)

# தொழில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர்-யுவதிகளுக்கு பொருத்தமான தொழிலினைப் பெற்றுக் கொடுப்பதற்காக இயங்கிக் கொண்டிருக்கும் மாவட்டத் தொழில் நிலையம் தனியார் நிறுவனமொன்றின் 200 வரையிலான வெற்றிடங்களுக்கு ஆட்களை வழங்கவுள்ளது.

நாடு முழுவதும் நூற்றிற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ள மேற்படி தனியார் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்படவுள்ள தமது 5 சுப்பர் மார்க்கட் கிளைகளுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வினை எதிர்வரும் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளுக்குட்பட்டு நடைபெறவுள்ள இந்நேர்முகத் தேர்வில் தொழிலுக்காக காத்திருக்கும் ஆர்வமுள்ள க.பொ.த. சாதாரணதரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் கற்ற 30 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் 24 வயதிற்குட்பட்ட பெண் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வில் பங்குபற்ற முடியும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 021 221 9359 என்ற இலக்க தொலைபேசி ஊடாகவும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட தொழில் நிலையத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். (4-6-8)


## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்படி சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை இரத்ததான முகாம் இடம்பெறும்.

இந்த இரத்ததான முகாமில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-8-18)

# கட்டுமானப் பணிகள் நிறைவு வீதி மீளத் திறப்பு



(நல்லூர்)

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் நாவலர் வீதி தொடக்கம் நல்லூர் ஆலயம் வரையான பகுதி நேற்று முதல் மீளத் திறக்கப்பட்டுள்ளது.

நல்லூரான் வளைவு கட்டுமானப் பணிக்கு வசதியாக கடந்த 8 ஆம் திகதி முதல் அந்த வீதியினூடாகப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்தது.

இதற்கு மாற்றுப் பாதையாக நல்லூர் ஆலயத்திலிருந்து கோவில் வீதியூடாகச் செல்லும் சிறிய வாகனங்கள் செட்டித்தெரு வீதி செட்டித்தெரு ஒழுங்கை (சின்மயா மிஷன் வீதி) ஊடாகவும் நாவலர் வீதியிலிருந்து நல்லூர் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் செட்டித்தெரு ஒழுங்கை செட்டித்தெரு ஊடா கவும் பயணித்தன.

இந்நிலையில் தற்போது கட்டுமான பணிகள் நிறைவடைந்தமையை அடுத்து குறித்த வீதி போக்குவரத்துக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளது. (4-8-33)

## உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்று அசாதாரண சூழ்நிலை காரணமாக வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி பொதுச் சந்தையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் ஆகியோரின் ஏற்பாட்டில் மேற்படி உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (4-8-18)

# பொலிஸ் அதிகாரியின் கைவிரலை பதம் பார்த்த இளைஞன் கைது



(நல்லூர்)

பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைவிரலை கடித்ததாக இளைஞன் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நாகவிகாரையில் கடமையிலிருந்த பொலிஸாருக்கும் அங்கு பணிபுரிந்த இளைஞனுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

தொடர்ந்து கைகலப்பாக மாறியுள்ளது. இதில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கை விரலை குறித்த இளைஞன் கடித்துள்ளார். காயத்துக்குள்ளான பொலிஸ் அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், விரலை கடித்த இளைஞனை பொலிஸார் கைது செய்தனர். (4-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது

## -ஜயநாத் கொலம்பகே-

(கொழும்பு)

**இலங்கை மீது எவரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என வெளியுறவுகள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.**



சில மேற்குலக நாடுகள் தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித உரிமைகளை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. தற்போதைய அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதனை இலக்கு வைத்து அதற்கெதிரான நடவடிக்கைகள் சர்வதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும் எந்த காரணியை அடிப்படையாகக் கொண்டும் இலங்கை மீது எவரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளால் முன்வைக்கப்படுகின்ற பிரதான குற்றச்சாட்டுக்களான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனார் விவகாரம் உள்ளிட்டவற்றுக்கு வெகு விரைவில் பதிலளிக்கப்படும் என்றும் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-4)

## கோட்டாபயவுக்கு நெருக்கமானவர் சஜித்துடன் இணைவு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர வழிகளை தயார் செய்த வியத்மக அமைப்பின் உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்துள்ளார்.

வியத்மக அமைப்பின் முன்னணி செயற்பாட்டாளரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா என்பவரே சஜித்துடன் நேற்று முன்தினம் இணைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் சஜித் பிரேமதாஸவின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வருகின்ற மாகாண சபைத் தேர்தலில் பொனிபஸ் பெரேரா மேல் மாகாண சபைக்காக களமிறக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## சுகாதார நடைமுறைகள் வெளியாகியது

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய புதிய கொவிட் 19 சுகாதார வழிகாட்டுதல்கள் நேற்று வெளியாகியுள்ளது.

குறித்த சுகாதார வழிமுறைகள் அடங்கிய கோவை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## போக்குவரத்து தொடர்பில் 8000 குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய நான்காவது நாளாக நேற்றுக் காலை ஆறு மணிவரையில் 8,957 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி ஏற்படும் இழப்புகளை தவிர்ப்பதற்காக விசேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையானது நேற்று சனிக்கிழமை வரை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா:செவ் 10 சூரி1 ல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: O/L.வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். விவாகரத்தும் ஏற்கப்படும். வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்.
தொ.இ: B/11714

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 23செவ் 3 சூரி5 ல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L.தொழில் - கணனி திருத்துநர்
எதிர்பார்ப்பு:சாதாரணபடித்த பெண்.உள் நாடுமட்டும்.
தொ.இ:B/111715

பிறப்பு:1986இந்து நட்சத்திரம்:பூரம்
கி.பா: 25 செவ் 9 சூரி5 ல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Photographer/ Video Editor
எதிர்பார்ப்பு:படித்த அழகானபெண்.உள் நாடு மட்டும்
தொ.இ: B/111716

பிறப்பு:1994 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 35 ½செவ் 3சூரி4ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Online நகை வியாபாரம். பேக்கரிவேலை.
எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண். வெளி நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ:B/111717

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 42 1/2 செவ்.சூரி8 ல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:. B.A
எதிர்பார்ப்பு: உள்நாடு கூடியவிருப்பம். வெளிநாடு ஆயின் UK மட்டும்
தொ.இ:G/2802

பிறப்பு:1974இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி.பா:28செவ் 11 சூரி12 ல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:சாதாரணதொழில்.கோயில் பூசை செய்பவர் அல்லது விவசாயம் போன் றவை. உள்நாடு மட்டும்.சைவபோசனம்.
தொ.இ:G/2807

பிறப்பு:1979இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா:62 1/2 செவ்5 சூரி7 ல் உயரம்:5'
தகைமை/தொழில்:O/L, A/L, தொழில் - TO தற்காலிகம்
எதிர்பார்ப்பு:அரசதொழில், ஆசிரியர், எழுதுனர். உள் நாடுமட்டும்.
தொ.இ:G/2832

பிறப்பு: 1991இந்து நட்சத்திரம்:ரோகினி
கி.பா:26 செவ் 9 சூரி8 ல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: Univesity
எதிர்பார்ப்பு:Dr,Eng தவிர்ந்த. பட்டதாரி. உயர் பதவியில் இருத்தல்.
தொ.இ:G/2839

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]ர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# பதவி வெற்றிடம்

## முகாமைத்துவ உதவியாளர்

( இருபாலாரும் )

### தகைமை

- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்,
- 01.04.2021 இல் 25 வயது பூர்த்தியாகி இருத்தல்,
- யாழ். நகர மையத்தில் இருந்து 6 Km சுற்றளவிற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல்.

**மேற்குறிப்பிட்ட கட்டாய தகைமைகளுடன்**

- கணினி தமிழ் ரைப்பிங் தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், சிங்களம் பேசும் ஆற்றல்

என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய ( தொ.பே இலக்கம் உட்பட ) விண்ணப்பத்தை,

**பொது முகாமையாளர்,**
**வலம்புரி,**
**இல. 3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரி பலி அரை கம்பத்தில் கொடி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பாராளுமன்றம் அமைந்துள்ள கேபிடால் கட்டடத்தின் வெளியே மர்ம நபர் ஒருவர் நீல நிற செடான் காரை கொண்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மீது மோதியுள்ளார். இதில் 2 அதிகாரிகள் காயமடைந்தனர்.

இதன் பின் காரில் இருந்து வெளியே குதித்த சாரதி அதிகாரிகளை கத்தியால் குத்தியுள்ளார். இதில், அதிகாரி ஒருவர் பலியானார். இதனால் கேபிடால் பொலிஸார் அந்த நபரை சுட்டுக் கொன்றனர்.

வெள்ளை மாளிகை கொடிக் கம்பங்கள் அரை கம்பத்தில் பறக்க விடப்படும் என்று ஜோபிடன் உத் தரவை ஜோபிடன் பிறப்பித்துள்ளார். (நி-8)

# சிவப்புப் பட்டியலில் நான்கு நாடுகள்

(லண்டன்)

உலகிலுள்ள 4 நாடுகளை இங்கிலாந்து அரசாங்கம் பயணதடை பட்டியலில் சேர்த்துள்ளது. கொரோனா பாதிப்பு காரணமாக இவ்வாறு 4 நாடுகளை இங்கிலாந்து சிவப்புப் பட்டியலில் இணைத்துள்ளது.

இங்கிலாந்து புதிதாக பாகிஸ்தான், கென்யா, பிலிப்பைன்ஸ் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளை இவ்வாறு சிவப்பு பட்டியலில் சேர்த்துள்ளது.

30 நாடுகளை சேர்ந்த மக்களுக்கு இங்கிலாந்திற்குள் நுழைய ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பழைய கல்லறைகளை தோண்டி அடக்கம் செய்யும் பிரேஸில்




(றியோடிஜெனிரோ)

பிரேஸிலில் கொரோனா சரீரங்களை அடக்கம் செய்வதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், பழைய கல்லறைகளை சுத்திகரித்து சரீரங்களை அடக்கம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அங்கு நாளாந்தம் 75,000 க்கும் அதிகமானோர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுவதுடன் 3,800 க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். சாவோ பவுலோ நகரில் கொரோனாவால் மரணித்தவர்ளை அடக்கம் செய்ய மயானங்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், ஏற்கனவே புதைக்கப்பட்டிருக்கும் சரீரங்களின் எச்சங்களை அப்புறப்படுத்தி சரீரங்களை அடக்கம் செய்ய அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# தமிழ் நாட்டில் புயல் எச்சரிக்கை



(சென்னை)

புதுச்சேரி மற்றும் தமிழக துறைமுகங்களில், 1 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்பட்டுள்ளது. அந்தமான் கடல் பகுதியில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது நேற்று பகல் குறைந்த காற்றழுத்த மண்டலமாக மாறியுள்ளது என்கிறது இந்திய வானிலை ஆய்வு மையம்.

இன்னும் 12 மணி நேரத்தில் இது மேலும் வலுவிழந்து வடகிழக்கு திசையில் மியன்மார் கரை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. (நி-8)

# இரண்டு புதிய சிவப்பு கடற்பாசி இனங்கள்

## இந்திய கடற்கரையில்



(டில்லி)

இரண்டு புதிய சிவப்பு நிற கடற்பாசி இனங்கள் இந்தியாவின் கடற்கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மத்திய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெலிக்ஸ் பாஸ்ட் தலைமையிலான கடல் தாவரவியலாளர்கள் குழு, பதீண்டா (சி.யு.பி.பி), இந்த பூர்வீக கடற்பாசி இனங்களை தமிழ் நாட்டின் கன்னியாகுமரி கடற்கரையிலும், குஜராத் மற்றும் தமன் டியூவிலும் கண்டறியப் பட்டுள்ளது.

ஹிப்னியா இண்டிகா மற்றும் ஹிப்னியா புல்லாட்டா ஆகிய இரு வகைகளும் கன்னியாகுமரியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தின் சிவ்ராஜ்பூர் மற்றும் சோம்நாத் பதானில் ஹிப்னியா இண்டிகா கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஹிப்னியா புல்லட்டாடா மன் மற்றும் டியூ கடற் கரையில் வளர்ந்து வருகிறது.

இந்தியக் கடற்கரைகளில் இந்த சிவப்பு பாசி வகை கடல் களைகளை கண்டு பிடித்தது இதுவே முதல் முறையாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வணிக அளவிலான சாகுபடியை மேற்கொண்டால் கடற்பாசிகளின் ஹிப்னியா வகைகள் நல்ல பண மதிப்பைப் பெறலாம் என்று கூறியுள்ளார்.

ஹிப்னியாவில் உணவுத் தொழிலில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கராஜீனன் என்ற உயிர் மூலக்கூறு உள்ளது. ஆனால், இந்தியாவில் கடற்பாசி சாகுபடி பிரபலமடையவில்லை என்பதே ஒரு மிக முக்கியமான உண்மை ஆகும். (நி-8)

# தடம்புரண்டது தொடருந்து

பலி எண்ணிக்கை அதிகரிப்பு



(தைபே)

தாய்வானின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சுரங்கப் பாதையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடருந்து தடம்புரண்ட விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது. (நி-8)

# கனிமொழிக்கு கொரோனா



(சென்னை)

திராவிட முன்னேற்ற கழகத்தின் மக்களவை உறுப்பினரும், மகளிரணிச் செயலாளருமான கனிமொழி கருணாநிதிக்கு கொவிட்- 19 தொற்று றுதியாகியுள்ளது.


தொற்றுக்குள்ளான அவர் தமது வீட்டிலேயே சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (நி-8)

# செவ்வாய் கிரகத்திலும் நில அதிர்வு நாசாவின் ரோவர் விண்கலம் கண்டறிவு

(வோஷிங்டன்)

பூமியில் ஏற்படும் நில அதிர்வு போன்று செவ்வாய் கிரகத்திலும் நில அதிர்வு பதிவாகியுள்ளதை நாசா விஞ்ஞானிகள் ஆய்வுக்காக அனுப்பிய சிறிய ரக ரோவர் விண்கலம் கண்டுபிடித்துள்ளது.

செவ்வாய் கிரகத்தின் சர்பேரஷ்ஃபோசே என்கின்ற பகுதியில் 3.3 மற்றும் 5 ரிக்டர் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது இதன்மூலம் தெரிய வந்துள்ளது.



அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவின் கிளை நிறுவனம் இன்சைட் ரோவர் என்கின்ற சிறிய ரக ரோவரை கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பியது.

இரண்டு ஆண்டுகளாக இந்த சிறிய ரோவர் செவ்வாய் கிரகம் தொடர்பான முக்கிய தகவல்களைத் திரட்டி அவ்வப்போது நாசா விஞ்ஞானிகளுக்கு அனுப்பி வருகிறது.

இதுவே செவ்வாயில் நில அதிர்வு ஏற்படுவதை கண்டு பிடித்துள்ளது.

இது குறித்து மேலும் ஆய்வுகளை முன்னெடுக்க நாசா விஞ்ஞானிகள் முடிவெத்துள்ளனர். (நி-8)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :-2,854,992

தொற்று :-131,035,339

(நேற்றய நிலவரம்)

# துருக்கியை இராச்சியம் செய்யும் கொரோனா

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலால் அங்கு ஒரே நாளில் 42 ஆயிரத்து 308 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் வரிசையில் துருக்கி 8 ஆவது இடத்தில் உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குளோபல் பேங்கிங் மற்றும் பைனான்ஸ் நிறுவனத்தினால் விருதளிக்கப்பட்டது.

AIA இன்ஷுவரன்ஸ்
இலங்கையின் மிகச் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக தொடர்ந்து 2 ஆண்டுகள்!

- மிகப்பெரிய மூலதனத் தேவைகளின் சதவீத பூர்த்தி
- 30 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுக்கு பங்கிலாபம் (2020 ஆம் ஆண்டு 9.18% ஐ பகிர்ந்துள்ளது)
- விவேகமான மற்றும் பாதுகாப்பான முதலீடுகள்
- 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவமும், சக்தியும் வாய்ந்த AIA குழுவின் வலுவான ஆதரவும்

ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி

AIA HEALTHIER, LONGER BETTER LIVES

(C-1302)


# இன்றைய இக்கட்டான நிலையில் மக்கள் அனைவருக்கும் தேவையானது இறை நம்பிக்கையாகும்



கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம், யாழ்.ஆயர்

2021ஆம் ஆண்டிற்குரிய உயிர்ப்புப் பெருவிழாவை உல கம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்க மக்கள் கொண்டாடும் இவ்வேளை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் ஆண் டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெரு விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

2021ஆம் ஆண்டில் கத் தோலிக்க சமய மக்கள் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாட இந்து மக்கள் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தமிழ் - சிங்கள புத்தாண்டை கொண் டாடுகிறார்கள். தமிழ் - சிங்கள புத்தா ண்டை கொண்டாடும் அனை வர்க்கும் எமது புத்தாண்டு விழா வாழ்த் துக்களை தெரிவித்து புதிய ஆண்டில் உங்கள் உள்ளத்து எண்ணங்கள் அனைத்தும் நிறைவு பெற இறையாசீர் வேண்டு கிறோம்.

இன்று இனம் - நிறம் - மதம் - மொழி - கலாசாரம் - கண்டம் என்ற எந்த வேறுபாடுமின்றி உலகம் முழுவதிலும் வாழும் எல்லா மக்களுடைய பெருங் கவலை கொரோனாத் தொற்று நோயா கும். எந்தக் காரணமுமின்றி. எந்த வேறு பாடுமின்றி எந்த சத்தமுமின்றி மனித உயிர்களை அழித்துக் கொண்டே செல்லும் இக்கொடிய நோய் உலக மக்கள் எல்லோருடைய இயல்பு வாழ்வையும் பாதித்து எல்லோரையும் பயத்திலும் பதற்றத்திலும் இனி என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் வாழ வைத் துள்ளது. இது யுத்தமின்றி சத்த மின்றி உலக உயிர்களை அழிக்கின்ற ஒரு கொடிய உலக யுத்தமோ என அனை வரையும் ஏங்க வைத்துள்ளது.

இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் இத்தொற்று நோய் அதிகரித்து வரும் இக்காலத்தில் நம்முடைய நலனையும் மற்றவர் நலனையும் கவனத்தில் கொண்டு கவனத்துடனும் கட்டுப்பாட் டுடனும் சுகாதார விதிமுறைகளைப் பேணி இருக் கும்படி அன்புடன் வேண்டு கிறோம்.

தமிழ் மக்களும் சம உரி மையுடைய இந்நாட்டுப்பிரஜைகள் என்பதை எப்போதும் மனதிருத்தி அரசியல் இலா பத்திற்காக இன உணர்வையும் மத உணர்வையும் தூண்டி துவேசத்தையும் பகைமை யையும் வளர்க்க முயல வேண் டாம். தமிழ் மக்கள் தேவையற்ற போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள் - உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் - மன உளைச் சல்கள் என்பவற்றில் வேண்டு மென்றே ஈடுபட வைக்காது செயற்படும்படி தமிழ் மக்கள் பெயரால் அரசிற்கு அன்பு வேண்டுகோள் விடுக்கி றோம்.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை நற்செய்தி ஏடுகள் பின்வருமாறு பதிந்து வைத் துள்ளன. வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கு முன்பே மகத லேனா மரியாள் கல்லறைக்கு சென்றார். கல்லறை வாயில் இருந்த கல் அகற்றப்பட்டிருப் பதை கண்டார். மற்ற சீடரும் உள்ளே சென்றார். கண்டார் நம்பினார். (யோவான் 20:1-9)

இன்றைய இக்கட்டான நிலையில் மக்கள் அனைவருக் கும் தேவையானது இறை நம் பிக்கையாகும். கண்டார் நம்பி னார் என்ற என்ற வார்த்தை கள் கத்தோலிக்க மக்களின் இறை நம்பிக்கையைத் தெரி விப்பதைப்போல் மற்ற மதத்த வர்களும் தமது சமய இறை நம்பிக்கையை அதிகமாக்கி எல்லா சமயத்தவரும் ஒன்றி ணைந்து உலக மக்கள் அனை வரையும் இத் தொற்றில் இரு ந்து நிரந்தரமாகப் பாதுகாக்கச் செபிப்போம்.

உயிர்த்த இயேசு உங்கள் அனைவ ரையும் என்றும் பாது காத்து எல்லாத் தேவைகளி லும் உங்களை நிறைவு செய்து என்றும் பாதுகாத்து வழி நடத்த இறையாசீர் வேண்டுகிறோம்.

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வேலுப்பிள்ளை அன்பழகன்



வலம்புரியின் கல்விப் பிரிவுடன் இணைந்து தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் வெளியிடுவதற்கு பெரும் பணி செய்த **வேலுப்பிள்ளை அன்பழகன்** ஆசிரியரின் இழப்பு கல்விப் புலத்திற்கு ஈடுசெய்ய முடியாதது.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி கல்விப் பிரிவு

# ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு
21 - 06 - 1983

உதிர்வு
04 - 04 - 2019

## பாலேந்திரநாதன் சுபேஸ்

முன் செய்த தவப்பயனாய் மண்ணிலே உதித்து
பின் செய்த பணிகள் யாவும் குடும்பத்தோர் நன்றாக வாழ்ந்திட
உழைத்திட்டாய் தன் பண்பே அதுவென வாழ்ந்துவரும்
வேளை காலனவன் அவசரமாய் கணக்கை முடித்திட்டான்.
இப்போது நினைத்தாலும் உன் புன்னகை எம் கண்களில் தெரிகிறது
உன்னை இழந்ததாய் இன்னும் நாம் நம்பவில்லை
பிரிந்ததாய் மட்டும் மனதில் பதியவைத்து
உன் நினைவுகளுடன் இன்றும் நடக்கின்றோம்

கிளான்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(C-1869)

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கலை முகம்" தொடங்கி 'கல்வாரிச் சுவடுகள்' வரை கலைகளை அரங்கேற்றிய 'கலைத்தூது' விற்கு

## யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் அஞ்சலிகள்

அருட்பணியாளர் நீ. மரிய சேவியர் தமிழ் கூறும் நல்லுலகு அறிந்த புகழ்பூத்த அறிஞர், கலைஞர், எழுத்தாளர். எண்பத்தொரு ஆண்டுகளாக தமிழும் மறையும் எனத் துடித்து வந்த ஓர் உயர் ஆளுமையின் இதயம் இன்று ஓய்வு பெற்றிருக்கிறது. எல்லைகள் கடந்து "கலைத்தூது" சென்ற அமைதிப் புறா நித்தியமாய் அமைதி கொண்டுள்ளது.

யாழ்ப்பாண தமிழ்க் கத்தோலிக்க வரலாறு, சைவ சித்தாந்தம் என்பவற்றில் துறைபோந்து முனைவர் நிலையடைந்த புலமையாளராக இருந்தாலும் கலையே அவர் தீராக் காதலாகி நின்றது. ஐம்பத்தைந்து ஆண்டுகளில் கலைத்தூது அழகியல் கல்லூரி, கலைத்தூது கலையகம், கலைத்தூது மணிமண்டபம், கலாமன்ற திறந்த வெளியரங்கு, கலாமுற்றம் எனும் ஓவியக்கூடம், கலைஞான சுரபியான இல்லம் என அவரது கலைக்கனவு பரந்து விரிந்து சென்றது. புலத்தின் பல்வேறு இடங்களில் மட்டுமல்லாது புலம் பெயர்ந்த மக்கள் மத்தியிலும் விழுதுகள் விட்டது இந்த கலா விருட்சம்.



இவரது பல்வேறு புலமை சார் மற்றும் கலைப்பணிகளில் துலாம்பரமாக மேலெழுவது இவரது திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை ஆகும். இயேசுவைக் கொலை செய்த குற்றவாளியாரென அரங்கில் தோன்றும் ஒரு நீதிமன்றம் அமைத்து விசாரித்து தீர்ப்பு வழங்குவது முதல், தமிழில் தோன்றிய காப்பியங்களின் நாயகர்களாக இயேசுவை சித்திரிக்கும் முயற்சிவரை திருப்பாடுகளின் காட்சிகளை மேடையேற்றுவதில் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை இவர் மேற் கொண்டுள்ளார்.

இவருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைக்கும் இடையேயான உறவு நீண்டதாயினும் இவரது பங்களிப்பு கடந்த 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட முதலாவது சர்வதேச கிறிஸ்தவ ஆய்வு மாநாட்டிலேயே உச்சம் கண்டது. இம்மாநாட்டுக்கு கிறிஸ்தவ நாகரிகத்துறையுடன் திருமறைக் கலாமன்றம் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

மாநாட்டின் மையப் பொருள் வடிவமைப்பிலிருந்து 'ஒமேகா' என்னும் மௌன ஆற்றுகை வரை இவரது பங்களிப்பு வியாபித்திருந்தது. இவரது புலமையும் தொடர்புகளும் மாநாட்டின் சிறப்புக்கு பெரும் பங்காற்றின.

அடிகளார் எம்மை விட்டுப் பிரிந்துள்ளமை எமக்குப் பெருந்துயர் தருகிறது. அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி நிற்கும் அதேவேளையில் அன்னார் விட்டுச் செல்லும் கிறிஸ்தவக் கலை, இலக்கியப் பங்களிப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை மாணவாகளின் ஆய்வுப் பசிக்கு நல்லுணவாக பல்லாண்டுகளுக்கு அமையு மெனவே கருதுகிறோம். 'கலைத்தூது' நித்திய அமைதியில் இளைப்பாறட்டும்!

# அரசுக்கு எதிராக ஐ.நாவில் முறைப்பாடளிக்கவுள்ளார் ரணில்



(கொழும்பு)

அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக கண்டனத்தை தெரிவிக்கும் வகையிலும் சிங்கராஜ வனம் உள்ளிட்ட தேசிய வன வளத்தை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் - சிங்கள புத்தாண்டில் பச்சை நிற ஆடையணிய வேண்டும் என கேட்டுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உலக மரபுரிமையான சிங்கராஜ வனத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ள அழிவு குறித்து செவ்வாய்க்கிழமை கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் முறைப்பாடளிப்பதோடு நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் ,

சிங்கராஜ வன அழிப்பிற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கட்சி தலைமையகமான சிறிகொத்தாவிற்கு முன்பதாக அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக ஓவியக் கண்காட்சியும் கண்டன ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்படும்.

ஐ.நா உட்பட தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு சிங்கராஜ வன அழிப்பு குறித்து அறிவிப்போம். ஜனாதிபதி , பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் உத்தியோக பூர்வமாக அறிவிப்போம். புத்தாண்டு தினத்தில் வன பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பச்சை நிற ஆடைகளை அணிந்து முன்மாதிரியாக செயற்பட அனைவருக்கும் அறிவிப்போம் என ரணில் தெரிவித்தார். (4-8)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு

## ஆசிரிய கல்லூரிகளில் பயில சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரிய கல்விப்பாட நெறியினை தொடர்வதற்காக 2021/ 2022 ஆம் ஆண்டுக்காக ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருப இலக்கம் 28 /2016 இற்கு அமையப்பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி பாடநெறியினை தொடர விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியர் கல்வி பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் மேற்படி சுற்றிக்கைக்கு இணங்க எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிர்வாகம். கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு விண்ணப்பம் செய்யலாம்.

விண்ணப்பப் படிவங்களையும், ஆலோசனை படிவங்களையும் **www. moe. gov. lk** எனும் இணையத்தளம் ஊடாக பெறலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில பெரேரா அறிவித்துள்ளார். (4-8)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தில் நகுலாம்பிகாதேவிக்கான அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம், பூசைகளுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ள அலங்கார உற்சவத்தில் சித்திரைப் புத்தாண்டு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இதேவேளை, ஆலய அலங்கார உற்சவத்தில் கலந்து கொள்ளும் அனைத்து அடியவர்களும் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்து கொள்ளுமாறு மேற்படி ஆலயப் பிரதமகுரு தெரிவித்துள்ளார். (4-8-18)

# மூவாயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டம்

(குருமன்காடு)



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை" எனும் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் அமையப் பெறவிருக்கும் "மல்வத்து ஓயா பல்நோக்கு நீர்ப்பாசன திட்டத்தின்" ஆரம்ப நிகழ்வு அநுராதபுரம் தந்திரிமலை, போகொட பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷவினால் மல்வத்து ஓயா பல்நோக்கு திட்டத்தின் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த மல்வத்து ஓயா நீர்ப்பாசன திட்டமானது சுமார் மூவாயிரத்து 246 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. குறித்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கான நீர்த்தேக்கத்தின் 70 வீதமான பரப்பு அநுராதபுர மாவட்டத்திலும் அதன் கீழ் பகுதி வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்திலும் காணப்படுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் விவ[illegible] [illegible] விவசாய நிலங்கள் நீரைப் பெறும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுக்கரைக் குளம் மற்றும் அகத்திமுறிப்பு குளம் ஆகியவற்றை அண்மித்து காணப்படுகின்ற விவசாய நிலங்கள் செழிப்படைவதுடன், விவசாய உற்பத்தியும் தன்னிறைவு அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், மல்வத்து ஓயா பல்நோக்கு திட்டத்தின் கீழ் சுமார் 4.7 ஜிகா வோள்ட்ஸ் மின்சாரம் உற்பத்திக்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் 5 ஆவது பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக விளங்கவுள்ள இத்திட்டத்தின் மூலம் 30 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் செழிப்படைவதுடன் விவசாயிகளின் நீண்ட நாள் கனவு நனவாகும் வகையில், விவசாய உற்பத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு, தொழில் வாய்ப்புக்கள், உள்ளக வீதி புனரமைப்பு, விவசாய உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு, கால்நடைகளுக்கு சாதகமான சூழல் என்பன மேம்படுத்தப்படுகின்றன. அத்துடன்சுற்றுலாதுறையும் விருத்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(4-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரமுந்திரிகை பயிர்ச் செய்கைக்கென 1500 ஏக்கர் மேய்ச்சல் தரை அபகரிப்பு

## தமிழர்களின் விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவே இம்முயற்சி

(மட்டக்களப்பு)

மரமுந்திரிகைச் செய்கை என்ற பெயரில் மட்டக்களப்பு கெவிழியாமடு பகுதியில் தமிழ் பண்ணையாளர்களின் 1500 ஏக்கர் மேய்ச்சற்தரை அபகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிழியாமடு பகுதியில் மேய்ச்சல் த்தரைக்கான காணி அபகரிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை தடுக்கும் வகையில் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கையெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மேய்ச்சல் தரை காணிகள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வளர்ப்பதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம், மண்முனை மேற்கு, பட்டிப்பளை, போரதீவுப்பற்று பிரதேசசபையின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள் என பலர் குறித்த பகுதிக்கு சென்றனர்.

குறித்த பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு முந்திரிகை செய்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 1500 ஏக்கர் காணியில் இவ்வாறு முந்திரிகை செய்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் விகிதாசாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்த இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அப்பகுதியில் கால்நடைகளை மேய்ப்பவர்கள் ஒரு தடி வெட்டினாலும் கைதுசெய்து நீதிமன்றத்திற்கு கொண்டு



செல்லும் வனஇலாகாவினர் தங்களது அனுமதியில்லாமல் காடுகள் அழிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இதுவரையில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காதது அரசாங்கத்தின் சூழ்ச்சி வெளிப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாதுகாக்கவேண்டிய வனங்கள் அழிக்கப்பட்டு திட்டமிட்ட குடியேற்றங்களை செய்வதற்கான நடவடிக்கையே இதுவாகும் என இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (நி-8)

# 15 ஆயிரம் அல் குர்ஆன்கள் பாடசாலையில் மீட்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் உள்ள ஒரு சர்வதேச பாடசாலையில் சுமார் 15,000 அல் குர்ஆன் புத்தகங்கள் சேமித்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளவத்தை பொலிஸார் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பில் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து இந்த புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல புத்தகங்கள் பொலிஸ் காவலில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும், புத்தகங்களின் உள்ளடக்கங்கள் வெளிவரும் வரை குறித்த பகுதிக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

# 220 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 220 மில்லியன் ரூபா மதிப்புள்ள 17 கிலோ கிராம் தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் தொழிலாளி ஒருவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். விமான நிலையத்துக்குள் இருந்து தங்கத்தை வெளியே கொண்டு செல்ல முயன்றபோது இந்தப் பணியாளர் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் இருந்து கடத்திவரப்பட்ட இந்தத் தங்கத்தை வெளியே கொண்டுவந்து சேர்ப்பதற்காக இனந்தெரியாதவர்களால் இந்தத் தொழிலாளியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்த விசாரணைகளை சுங்கத் திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களின் நெடுந்தூர பிரயாணத்திற்காக 200 பேருந்துகள் நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அத்தோடு 21 தொடரூந்து சேவைகளும் ஈடுபடுத்தப்பட்டதாக தொடரூந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி விசேட தொடரூந்து சேவைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகப் பதில் பொது முகாமையாளராக டபிள்யூ.ஏ.டீ. எஸ்.குணசிங்க தெரிவித்துள்ளார். (நி-8)

# கட்டுப்பாடுகளுடன் புத்தாண்டை கொண்டாடுங்கள்-சவேந்திர சில்வா

(கொழும்பு)

சிங்கள, தமிழ் புத்தாண்டைக் கொண்டாட வேண்டாம் என்று கூறவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய கட்டுப்பாடுகளுடன் புத்தாண்டைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக குடும்ப அங்கத்தவர்களுடன் மாத்திரம் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுமாறும் இதேநேரம் தற்போது நாட்டில் காணப்படுகின்ற கொரோனா நிலைமைகளை மதிப்பீடு செய்து புத்தாண்டில் முன்னெடுக்கப்படக்கூடிய நடைமுறைகள் குறித்து சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 200 |
| தக்காளி | 80 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 110 | 120 |
| கரட் | 170 | 180 | 200 |
| பூசணி | 65 | 60 | 80 |
| புடோல் | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-220 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 230 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 150 | 160 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 160 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 1000 |
| போஞ்சி | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 60-70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 180 | -- | 280 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | -- | 120 |

# நீரில் மூழ்கி சிறுவன் பலி

(நுவரெலியா)

நுவரெலியா, இராகலை பகுதியிலுள்ள குளத்துக்கு நண்பர்கள் சகிதம் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி பலியாகியுள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சிறுவனும் அவரின் 3 நண்பர்களும் நேற்று முன்தினம் இராகலை, மந்திரிதென்ன பகுதியிலுள்ள குளமொன்றில் நீராடச்சென்றுள்ளனர்.

இவ்வாறு நீராடிக்கொண்டிருக்கையில் குறித்த சிறுவன், சேற்றுக்குள் சிக்கி நீரில் மூழ்கியுள்ளார். 3 மணிநேர தேடுதலைத் தொடர்ந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (நி-8)

# திடீரென தீப்பற்றிய கார்



(கொழும்பு)

பேலியகொட மேம்பாலத்திற்கு அருகில் கார் ஒன்று தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரரிவித்தனர்.

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம் பெற்றது.

தீப்பரவல் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

# வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் பலி

(அவிசாவளை)

அவிசாவளை - மாதொல பகுதியில், பழைய இரும்புப் பொருட்களை சேகரிக்கும் நிலையம் ஒன்றில் திடீரென நிகழ்ந்த வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சேகரிக்கப்பட்ட பழைய இரும்பு பொருட்களை, ஊழியர் ஒருவர் எரிவாயுவை பயன்படுத்தி வெட்டும் போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் அவர் குறித்த இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 3 ஊழியர்கள் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் முடக்க நிலையை நீக்கி வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி தரவும்

## வர்த்தக சங்கத்தினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் கடந்த 26 ஆம் திகதி முதல் முடக்கப்பட்டதனால் வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது .

இருந்த போதிலும் அதே முடக்கப்பட்ட பகுதிகளில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறு வனங்கள், நகை அடகு நிலை யங்கள் போன்றவை வழமை போல், இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இது எந்த விதத்திலும் நியாயமாக கருத முடியாதுள்ளது என யாழ். வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

முடக்கப்பட்டுள்ள யாழ். நகரின் முக்கியத்துவம் வாய்ந்த பகு திகளின் தடையை நீக்கி மீண் டும் சகஜ நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 1440 நகர வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற் கொள்ளப்பட்டதாக அறிகின்றோம்.

இதில் 43 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகா தாரப் பிரிவினரால் தெரிவிக் கப்படுகின்றது. இது விகித அடிப் படையில் 3% ஆகக் கருதப்படுகின்றது.

நகரத்தின் முக்கிய பகுதி முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதால் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் மொத்த வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கூட்டு றவுத் துறை மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநி யோகம் செய்ய முடியாதுள்ளது.

தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையானது அவர்களை மேலும் பாரியளவில் பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் எல்லா பகுதிகளிலும் கொரோனா தாக்கம் இருப்பது தாங்கள் அறிந்ததே. அப்படி இருக்கும் போது யாழ்ப்பாண நகர வர்த்தகர்களை வர்த்தகம் செய்யவிடாது தடை விதித்து அவர்களை பாதிப்படையச் செய்திருப்பது கவலையளிக்கிறது.

தமிழ் -சிங்களப் புத்தாண்டு வர இருக்கும் இவ் வேளையில் தாங்கள் ஏற்படுத்திய தடையானது வர்த்தகர்கள், உள்ளூர் உணவு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள், விவசாய உற்பத்திப் பொருட்களில் ஈடுபடுவோர் என பல துறை சார்ந்த வர்த்தக நடவடிக்கைகள் பாரிய பாதிப்புக்களையும், பாரிய நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே நாம் மேலே குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து எமக்கு நீதி வழங்குவதுடன் நாளை திங்கட்கிழமையிலிருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-8)

# பிரதேச சபையால் குழிகள் மூடும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி அரசபுரம் வீதியில்உள்ள குழிகள்மூடுகின்ற வேலையினை பூநகரி பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர். கிளிநொச்சி நகரில் இருந்து பூநகரி வாடியடி, அரச புரம் செக்காலை வழியாக முக்கொம்பன் மகா வித்தியாலயம் வரை பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து நடைபெறவில்லை.

காரணம் முக்கொம்பனுக்கும் அரசபுரத்திற்கும் இடையிலான வீதியில் மூன்றிடங்களில் பாரிய குழிகள் காணப்பட்டன. இக்குழிகளில் நீர் நிறைந்து காணப்பட்டது. இதன் காரணமாக பேருந்து சேவை நடைபெறவில்லை. பேருந்து சேவை நடத்துவதற்கு பூநகரி



பிரதேச சபையிடம் கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளரினால் குறித்த குழிகளை மூடித் தரும்படி உதவி கோரியிருந்தார். பூநகரி பிரதேச சபையிடம் உடனடியாக குழிகளை மூடுவதற்கான நிதி வளம் காணப்படவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் பூநகரிப் பிரதேச சபையினால் குழிகள்மூடுகின்ற வேலை ஆரம்பமானது. (4-6-350)



மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று சனிக்கிழமை பொது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சென்று அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:-ஜோசப்நயன்)

# ஒட்டுசுட்டானில் ஒரு வாரமாக குடிநீர் விநியோகம் தடை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் ஒரு வார காலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச.சத்தியசுதர்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சம்மளங்குளத்தின் நீர்த் தாங்கியில் இருந்து ஒட்டுசுட்டான், தட்டார்மலை, வித்தியாபுரம், சம்மளங்குளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 2,500 வரையான குடும்பங்களுக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு வார காலமாக குடிநீர் வழ ங்கல் இடம் பெறவில்லை.

இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது நீர்ப் பம்பி பழுதடைந்துள்ளது. நீர்த் தொட்டிகள் துப்புரவு செய்கின்றோம் என தெரிவிக்கப்பட்டது.

தற்போது கடும் வெயிலினால் குடிநீர் தேவையான நிலையில் ஒரு வார காலமாக குடிநீரினை விநியோகிக்காமல் இருப்பது ஒரு பொறுப்பற்ற செயல் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.(4-8-350)

# ஆயரின் இழப்பு தமிழ்மக்களை அநாதைகளாக்கிவிட்டது

## ஆனந்தசங்கரி இரங்கல்

(கிளிநொச்சி)

ஆயர் இராயப்பு யோசேப்பு ஒரு சகாப்தம்என கூறுவது மிகையாகாது. பல வழிகளிலும் அன்னாருக்குஅப்பெயர்பொருத்தமாகும்

சமயத் தொண்டோடு அவர் பங்கெடுத்த பணிகள் பல. அவற்றால் மிக பிரதானமானது இனப்பிரச்சினை தீர்வுக்கு அவர் ஆற்றிய தொண்டேயாகும். எவருக்கும் பயப்படாது தான் சரியென நினைத்ததை கடைசி வரை செய்து முடித்தவர் அவர். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அன்னாரால் சுட்டிக்காட்டப்பட்ட சிறு தவறு களைக்கூட அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் திருத்திக் கொண்டனர். அச்செயல் அன்னாருக்கு இருசாராரும் கொடுத்த பெரும் மதிப்பினாலேயே ஆகும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக சகல தமிழ் அரசியற் கட்சிகளையும் ஒன்று சேர்க்க பெரும் முயற்சி எடுத்திருந்தார். அது சம்பந்தமாக பல தடவைகள் கட்சி தலைவர்களை வரவழைத்து பேச்சு நடத்தியதுடன் ஆலோசனையையும் வழங்கியிருந்தமை உலகறிந்த உண்மை.

இறுதிவரை இனப்பிரச்சினையை மையமாக வைத்தே செயற்பட்டார் என்பது அனைவரும் அறிந்ததே.

அன்னார் உயிருடன் இருந்தவரை எம்மக்கள் மிக்க தைரியமாக செயற்பட்டார்கள் என்பதும், இன்று அநாதைகளாக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதும் நாம் அனைவரும் அறிவோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் பிரார்த்திக்கிறேன். (நி-4-8)




பெரிய வெள்ளி விசேட ஆராதனைகளும் சிலுவைப்பாதை [illegible]

(படங்கள்:- [illegible])

# புதையல் தோண்டிய இருவர் கைது

(முறிகண்டி)

தருமபுரம் பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வு பிரிவினரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சந்தேகத்திற்கிடமான தொழில்நுட்ப உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களில் ஒருவர் வவுனியா பகுதியை சேர்ந்தவர் எனவும், மற்றவர் அம்பாறை பொத்துவில் பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை மற்றுமொரு சந்தேக நபர் தப்பி ஓடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-8-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் என்பது கொடிய அமிலம். அது விழும் இடத்தைவிட இருக்கும் இடமே பெரிதும் நாசமாகும். ~ கிவெண்டல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேரினவாதிகளின் கோசங்களால் அமைதி ஏற்பட்டு விடாது

தமிழ் மக்கள் தங்கள் உரிமை தொடர்பில் கதைத்தால், எழுதினால் அது பயங்கரவாதத்துக்குரிய குற்றம்.

அதேவேளை தமிழ் மக்களுக்கு எதிராகத் துவேசத்தைக் கக்குகின்ற பேரினவாதிகள் தேசப்பற்றாளர்கள் என்பதுதான் இந்த நாட்டின் நடைமுறையாக உள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர்களை – அகிம்சை வழியில் பேரணி நடத்தியவர்களை விசாரணை செய்து வழக்குப் பதிவு செய்கின்ற பொலிஸார் தமிழ் மக்களுக்கு எதிராகக் கதைத்து இனவாதத்தைத் தூண்டினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாராவது ஒரு சிங்களவரை பொலிஸார் விசாரணை செய்தனரா என்றால் இல்லை என்பதுதான் அதற்கான பதிலாக இருக்கும்.

இந்தப் பக்கச்சார்புதான் இலங்கைத் தீவில் இனவாதத்தை தொடர்ச்சியாகப் பாதுகாத்து வருகிறது.

உண்மையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பேசுவதை சிங்களத் தரப்புகள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் இறுக்கமாக அறிவிக்குமாக இருந்தால், இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாகும்.

ஆனால் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி தமிழ் மக்கள் சிங்களவர்களின் எதிரிகள். அவர்கள் வந்தேறு குடிகள் என்பதுபோல இனவாதத் தீயை எரிக்கின்ற சிங்கள பேரினவாதிகளை இன்னமும் ஆட்சிப்பீடங்கள் கட்டுப்படுத்தவில்லை.

இப்போதுகூட ஆட்சிப்பீடத்தில் இருக்கக் கூடிய அமைச்சர் சரத் வீரசேகர நாளுக்கு நாள் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் இருக்கிறார். அவரின் கருத்துக்கள் தமிழ் மக்களின் குருதியைக் கொதியேற்றுகிறது.

ஓர் அமைச்சர் என்ற தகுதி நிலையையும் மறந்து தமிழ் மக்களை மிக மோசமாக விமர்சிக்கின்ற அமைச்சர் சரத் வீரசேகர போன்றவர்களை அதட்டுவதற்கு ஆட்சியாளர்கள் தயாரில்லை என்றால் எப்படி நாட்டில் அமைதி ஏற்படும். எங்ஙனம் இனவாதம் முடிவுக்கு வரும்.

ஆக, பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியதுபோல; இலங்கையில் சிங்களவர்கள் உள்ளனர். தமிழர் உள்ளனர். முஸ்லிம்கள் உள்ளனர் ஆனால் இலங்கையில் இலங்கையர்கள் இல்லை என்பது தொடரப் போகிறது.

இந்த ஆழ்மனப் பதிவு இருக்கும்வரை இலங்கையின் இயங்குநிலை ஆயுதமுனைகளில் மட்டுமே தங்கியிருக்கும்.

### திங்கள் துக்க தினம் அனுஷ்டிப்பதற்காக

## மன்னாரில் இருந்து வடக்கிற்கான போக்குவரத்து சேவை இடைநிறுத்தம்

(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் நாளை திங்கட்கிழமை இடம்பெற உள்ள நிலையில் அன்றைய தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்கும் வகையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வட மாகாணத்திற்கான தனியார் போக்குவரத்துக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்தார்.அவர்மேலும் தெரிவிக்கையில்,

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் நாளை திங்கட்கிழமைஇடம்பெறவுள்ளது.

அன்றைய தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு பல்வேறு தரப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக மன்னாரில் இருந்து வட மாகாணத்திற்கான தனியார் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளூர் சேவைகளும் அன்றைய தினம் இடம் பெறாது.

வட மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் இருந்தும் மன்னாரிற்கான தனியார் சேவைகள் அன்றைய தினம் இடம்பெறாது.

மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளும் ஆயரின் துயரில் பங்கு கொள்வதோடு, முழுமையாக துக்க தினத்தை அனுஷ்டிப்போம்.

அன்றைய தினம் இறுதி அஞ்சலிக்காக வருகின்ற மக்கள் மீண்டும் திரும்பி செல்ல தேவை ஏற்படின் விசேட போக்குவரத்துச் சேவைகள் எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் மேலும் தெரிவித்தார். (ம-3,285)

## எம் இனத்துக்காக தற்துணிவோடு குரல் கொடுத்தவர் இராயப்பு யோசப்

### கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

தற்துணிவோடு எம்மினத்துக்காக குரல்கொடுத்த பெரியவர் முன்னாள் ஆயர் இராயப்பு யோசப். அவரது பிரிவு மிகுந்த வேதனை தருகிறது என கலாநிதி ஆறு. திருமுருகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவை முன்னிட்டு வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிக இக்கட்டான காலகட்டங்களில் தற்துணிவோடு எம்மினத்துக்காக் குரல்கொடுத்த ஆன்மீகப் பெரியவரை யாம் இழந்துவிட்டோம்.மக்களின் அவல நிலைகளை உலகுக்கு தயங்காது எடுத்துக்கூறியவர்.

போர்க்காலத்தில் அகதிகளின் கண்ணீரைத் துடைப்பதில் அக்கறை காட்டியவர்.ஏனைய மதத் தலைவர்களோடு மிகுந்த நட்போடு பழகியவர். பாரம்பரியமான மரபுகள் என்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆவல் கொண்டவர்.தமிழ் இலக்கிய விழாக்களை என்றும் ஊக்குவித்தவர்.இப் பெரியாரின் பிரிவு குறித்து சைவத்தமிழ் மக்களின் சார்பில் எமது கவலையைத் தெரிவிப்பதோடு, அவர் காட்டிய நேச உணர்வை அனைவரும் பின்பற்ற வேண்டி,அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், மறக்காறம்பளை, கணேசபுரம், சமணங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஹூனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், பாலைக்குழி, பாலைக்குழி திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## உயர்தரப் பெறுபேறுகள் ஏப்ரல் இறுதிக்குள் வெளியாகும்


(கொழும்பு)

2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ஏப்ரல் இறுதிக்குள் வெளியாகும் என்றும் நம்புவதாகவும், சித்தியடையும் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் சேர்ப்பதில் தாமதம் ஏற்படாது என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டி கலகெதரவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

"ஜூன் மாதத்திற்குள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவும், ஜூலை மாதத்தில் உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகளை தொடங்கவும் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றார். (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



### வீண்விரயம் செய்யாதீர்கள்

❖ உங்கள் நெறியில் (சமயத்தில்)அநியாயமாக எதையும் மிகைப்படுத்தாதீர்கள். (திருக்குர்ஆன்5:77)

❖ (இறைவனின் அடியார்கள்) செலவு செய்யும் போது வீண் விரயமும், கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவு இந்த மிதமிஞ்சிய இருநிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும். (திருக்குர்ஆன் 25:67)

❖ உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால், விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக இறைவன் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை. (திருக்குர்ஆன் 7:31)

❖ உமது தொழுகையில் உமது குரலை மிக உயர்த்த வேண்டாம் மிகத் தாழ்த்தவும் வேண்டாம். இவ்விரண்டுக்கும் இடையே மிதமான தொனியைக்கடைப்பிடிக்கவும். (திருக்குர்ஆன் 17:110)

❖ உனது நடையில் மிதமான நிலையை மேற்கொள். உனது குரலை சற்றுத் தாழ்த்திக் கொள். திண்ணமாக, அனைத்துக் குரல்களிலும் மிகவும் அருவருப்பானது கழுதையின் குரலாகும். (திருக்குர்ஆன் 31:19) (வேதவரிகளும் தூதர் மொழிகளும்நூலில் இருந்து)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

04.04.2021
பங்குனி 22, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி முற்பகல் 9.37 மணிவரை
மூலம் முற்பகல் 7.39 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவரை
இராகுகாலம் 4.40-6.10 மணிவரை
சந்திராஷ்டமம்:- ரோகினி
உயிர்த்த ஞாயிறு

வளவன்


மேஷம்

தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், ரோக பயமுண்டு.


ரிஷபம்

புதிய முயற்சிகளை சற்று தள்ளிப் போடுவது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பணப் பற்றாக் குறையுண்டு.


மிதுனம்

களஸ்திர நன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


கடகம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழில் முன்னேற்றம் கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன நன்மையுண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.


துலாம்

உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


விருச்சிகம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


தனுசு

சிந்தனை ஆற்றலால் சிறப்படைய வேண்டிய நாள், போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.


மகரம்

எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.


கும்பம்

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் உயர புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


மீனம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

கண்ணால் காணாததற்கு இதயம் ஏங்காது




பொறிக்கடவை

## திருவருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய

### வருடாந்த பங்குனித் திங்கள் வேள்விப் பொங்கல் விழா

மெய்யடியவர்களே!

- ஆலயத்தின் வருடாந்த பங்குனித் திங்கள் வேள்விப் பொங்கல் விழா நாளை (05.04.2021) திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் 06.04.2021 (செவ்வாய்க்கிழமை) அதிகாலை வரை எளிமையான முறையில் நடைபெறவுள்ளது.
- ஆலயத்தின் உள்வளாகத்தில் 100 அடியவர்களுக்கு வழிபாட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே தங்கள் நேர்த்திக் கடன்களை சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து காலம் தாழ்த்தாது நிறைவேற்றி ஏனைய அடியவர்களுக்கும் இடமளித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- தொற்று நோய் அபாயம் காரணமாக அடியார்கள்.வர்த்தகர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தருவது தவிர்க்கப்பட்டுள்ளது.

குஞ்சுப்பரந்தன் (C-1878) ஆலய அறங்காவலர் அவையினர்

பழைய கேற் தேவை

நல்ல நிலையில் உள்ள பழைய கேற் (11 அடி) தேவை.

தொடர்பு
078 423 9984

கன்னீர் அஞ்சலி



எமது நண்பனும்
ஆசிரியருமாகிய
அமரர்
வே. அன்பழகன்
அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின்
பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(6455)

இல.92(150), நாவலர் வீதி,
மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

சிவ தயா அச்சகம்
தயா வெளியீடு

கண்ணீர் அஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை அன்பழகன்

பிறப்பு 31.10.1974
இறப்பு 02.04.2021

அன்பே உருவான கருவினில் அவதரித்து
இன்பம் தழைத்தோங்க இன்முகத்தால்
கல்விப் பணி புரிந்து. குழந்தைகளுக்குப்
பார்போற்றும் கல்வியைப் புரியவைத்து
அவனியிலே இன்புற காலன் உமை அழைத்திட
எங்கு சென்றீர் அன்பழகா!
உன் சேவை காலனுக்கும் தேவை போல்
சென்று வழி தேடுகின்றோம்
வருவீரோ. எம் குறை தீர்க்க!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(C-1875)

அருள்நாயகி புத்தகசாலை | கண்டி வீதி, கொடிகாமம்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்

அன்பின் அடையாளமாய்
அழகின் அத்திவாரமாய்
அன்பழகனாய் எம்மோடு உலா வந்தீரே!
பாலர்தம் கரம் பிடித்து
வாழ்வில் உயர வைத்தீரே!
இன்று எம்மை விட்டு
எட்டா உயரத்தை அடைந்து விட்டீரே!

எம் மழலைகளின் புலமைச்சிகரமே!
இனி எங்கு தேடுவோம்
உன் போல் ஆசானை?
மீளாத்துயரோடு உந்தன்
மாணவச் சிரார்களும்
உன் ஆருயிர் நண்பர்களும்
கண்ணீர் கடலினுள் மூழ்கினோமே!



பிறப்பு 31.10.1974
இறப்பு 02.04.2021
(6453)

எஸ்.மணிவர்ணன் குடும்பம்,
கல்வியங்காடு வடக்கு, நல்லூர்.

வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மேல் நீதி...

சிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ்.மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றும் ஊழியர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட 50 பேருக்கு இரு நாட்களுக்கு முன் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

இவ்வாறு பெறப்பட்டிருந்த மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் ஊழியர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து யாழ்.மேல் நீதிமன்ற வளாகத்தை முடக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக நீதிமன்றத் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம-3,18,33)

## வவுனியாவில்...

மாலை கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞனிடம் இருந்து 60 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,250)

## திருநெல்வேலி...

நேற்றைய தினம் 921 பி.சி.ஆர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட நிலையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அவர்களில் 4 பேர் பரமேஸ்வரா சந்தியில் நடத்தப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர் பரிசோதனையில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

அதிலும் 3 பேர் வர்த்தகர்கள் என்பதுடன், மேலும் ஒருவர் பரமேஸ்வரா சந்தி குமாரசாமி வீதியை சேர்ந்த நபர் தனக்கு அறிகுறிகள் இருப்பதாக செய்து கொண்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. (ம-3,18,33)

## யாழில் 7 பேர்...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் முல்லேரியா ஆய்வுகூடம் என இரண்டிலும் 920 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 9 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பணியாற்றும் பட்டதாரி பயிலுநர் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## தமிழ் மக்களு...

தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரத்தை சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் செயற்பாடாகக் கருதாது எமது பிரஜைகள் மீதான அக்கறையில் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ம-3)

## பொலிஸில் முறை...

களது உறவினர்களால் ஏன் பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஜனாதிபதியிடமோ முறைப்பாடு அளிக்க முடியும். அவர்களால் முறைப்பாடு அளிக்கப்பட்டால் அதற்கேற்ப சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றார். (ம-3)

## 4 பேர்...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 579 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## காணாமல்போன...

வலகம் குறித்து கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்போது, காணாமற்போனோரின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக இருந்தால், அதற்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை என கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

மேலும், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் அலுவலகத்தை நீண்டகாலத்திற்கு கொண்டு செல்ல முடியாது எனவும் அதனை இரத்து செய்ய நேரிடும் எனவும் அவர் கூறினார். (ம-3)

## அரசு...

நான் எப்போதும் கூறி வருகின்றேன். நாம் அதனையே பாதுகாக்க வேண்டும். அரசுக்கும் எனக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களை தோற்கடிப்பேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத் துக்குட்பட்ட வெடிவைத்தகல்லு கிராம சேவகர் பிரிவின் போகஸ்வெவ மகா வித்தியாலய வளாகத்தில் நேற்று நடைபெற்ற "கிராமத்துடன் கலந்துரையாடல் "17ஆவது நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## யாழ்.கல்லுண்...

தாக்குதலுக்கு இலக்கான இளைஞனை மீட்க வந்த நண்பன் மீதும் அராலி பாலத்தடியில் வைத்து கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்த இரண்டு இளைஞர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-3,33,104)

காணி விற்பனை
யாழ்ப்பாணம், உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் ரோட்டுடன் 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமையில்)
தொடர்பு
077 288 0152
077 623 4204
077 235 2656
(6459)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை மாணவர்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த ஆசிரியர்

**வே. அன்பழகன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை

தன நிதானய
திகதி - 2021.04.03
சீட்டிழுப்பு இலக்கம் - 483
A 12 33 36 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2741
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 31 36 54 67

மஹஜன சம்பத
திகதி 2021/04/03
சீட்டிழுப்பு இலக்கம் 4446
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 2 0 4 6

மெகா பவர்
திகதி 03/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0807
E 03 45 50 58 68

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1110
வெற்றி இலக்கங்கள்
மகரம் 5 4 3 1 4 6
கடகம் 10408

அதிர்ஷ்ட
சீட்டிழுப்பு வாரம் 066
சீட்டிழுப்பு திகதி 03.04.2021
வெற்றி இலக்கங்கள் 11 15 23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,469,620

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1242
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 03.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 124,739,985
வெற்றி இலக்கங்கள் 07 09 44 75 I

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3572
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 03.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,826,830
வெற்றி இலக்கங்கள் 10 49 59 66 G

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 03.04.2021
வெற்றி வாரம்: 3123
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 17 33 39 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,692,639

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1416
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 03/04/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 15 20 59 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,195,629/=

சுபிர்ன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 424
திகதி 03.04.2021
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 39 40 51
விதி எண் 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,886,900
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

எமது Everest நிறுவனம் வட மாகாணத்தில் புதிய கிளை களை ஆரம்பிக்கவுள்ளதால் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தினை இப் பிரதேசங்களில் வசிக்கும் இளைஞர்கள், யுவதிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

◆ O/L, A/L படித்தவர்களுக்கு தகுந்த பயிற்சி வழங்கப்படும். (Assistant manager, Clerk, Manager )

◆ பயிற்சியின் பின் (03-06 மாதம்) நிரந்தர வேலைவாய்ப்பும் வழங்கப்படும். (EPF, ETF) உண்டு. (6456)

077 298 6763, 076 888 9384

## பணியாளர் தேவை JOB VACANCY

Requirements
- Sales Assistant (18-35) Female
- Cashier (18-35) Male, Female
- Packers (20-40) Female
- Home Delivery employees (Delivery Boy) Male
- Data Entry (25-35) Female

சுயவிபரக் கோவையுடன் பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் இணைத்து மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்

Send your Details
Our Email northwayfamilymart18@gmail.com



Northway Family Mart (C-1879)

No. 184, Palaly Road, Thirunelvely.

077 991 4945

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
- நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1841)

0768226240 DHL

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## தேவை

தாளம் பூ, மாதுளம் பூ, செங்கனி நீர், விஷ்ணுகிராந்தி மற்றும் யம்புநாவல் காய் மொத்தமாக தேவை. (C-1880)

077 457 8852

## வெல்டிங் வேலைக்கு ஆட்கள் தேவை

சிறந்த அனுபவம் வாய்ந்த வெல்டிங் வேலையாட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (6451)

077 592 5088

## BOC TRAVELS (Pvt)Ltd.

Hospital Road, Jaffna.

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான BOC Travels நிறுவனத்தில் Air Ticketing, Travel Insurance உடன் இணைந்த ஏனைய சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம் (C-1876)

021 222 4575/76, 070 384 9335, 070 395 1794

## சோ(f)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6449)

077 224 2787

## மணமகள் தேவை

1987, இந்து கௌரவ குடும்பம் சொந்த இடம் : யாழ்ப்பாணம். இலண்டனில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (6158)

077 506 8819

## அதிபர் - ஆசிரியர்களுக்கு

தரம் 1 முதல் 11 ஆண்டுக்குரிய மாணவர் தேர்ச்சி அறிக்கை, மாணவர் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி வெளிவந்துவிட்டது. உடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிவ தயா அச்சகம்
92, (150) நாவலர் வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
( NSB வங்கிக்கு அருகில் ) (6454)

077 396 5214, 021 221 9483

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1842)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் தங்கவடிவேலு



பிறப்பு - 02.12.1947
இறப்பு - 03.04.2021

தாவளை, இயற்றாளை (மந்துவில்) கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தங்கவடிவேலு நேற்று (03.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாபானர் பொன்னையா - தங்கம்மா (கேதுப்பிள்ளை) தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் விஜிதா (விஜி), விஜயானந்தா (பிரான்ஸ்-குமார்), வினோஜிதா (ஜேர்மனி-ராசாத்தி), விஜயலலிதா (கனடா-லலி), விஜயரூபன் (ஜேர்மனி - ரூபன்), விஜயசங்கர் (அப்பன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திரபாலன், தனுசியா, ராசலிங்கம், கிருபாகரன், வினோதினி, மாலதி (ஆசிரியை - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவநாத், கோபிநாத், பிரதீபன், கம்ஷா, ராகவி, தாமீரன், ஜஸ்வின், ரிஷி, சரன், அனுசா, யதுசா, கபிஷன், அபி, அபிநயன், அகல்யன், தலோமிகா, கஜானி, அகர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, சிவகாமிப்பிள்ளை, நடராசா மற்றும் நவரத்தினராஜா, வள்ளிப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகேஸ்வரரின் அன்பு மைத்துனரும் சிவலோகதேவியின் உடன்பிறவா சகோதரனும் சுகந்தி (தேவிகா), ஜெயந்தி (பவா), ரவிகாந்தன் (ரவி), பிரியந்தி (சுட்டி), திவ்வியகாந்தன் (ரமணா), பிரசாந்தி (கோபி) ஆகியோரது மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.04.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தச்சகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6448)

தாவளை, இயற்றாளை, கொடிகாமம். 077 239 3124 077 032 7452

தகவல்:- குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 04 . 1939



இறப்பு 28 . 03 . 2019

திருமதி
### அன்னலட்சுமி பத்மநாதன்

ஒருமுறை தான் இப்பிறவி
போனால் வராது என்று
தெரிந்தும் பாவி எம் மனம்
உங்களைத் தேடுகின்றதே - அம்மா
கண் முன்னே நீங்கள் வாழ்ந்த
காலம் கனவாகிப் போனதுவோ - அம்மா
ஒரு நிமிடம் எமைக் காணா விட்டால்
துடித்து பதைபதைத்த நினைவுகள்
இன்னமும் கண்ணீர் வர வைக்குது அம்மம்மா
ஆசையுடன் அணைத்து
அம்புலி காட்டி அமுதூட்டுவீர்கள்
என காத்திருந்த வேளை
காலன் உங்களை கவர்ந்து விட்டானே
வாழ்ந்த கதை முடியமுன்
இறந்திடவா நீ,பிறந்தாய்
நீ ஆண்ட கதை அழிவதில்லை - இப்பூமியிலே

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 103/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (5741)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

Viber 076 636 3378
நாதம் 303
வள்ளுவர் ஆண்டு 2052 04.04.2021 தொலைபேசி : 021 222 3378

தமிழினத்துக்கான குரல்



களப்பணியில் கடவுளைக் கண்ட துறவு





## ஏன் வந்தார்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை இறையடி சேர்ந்துவிட்டார்.

தமிழினத்திற்காகக் குரல் கொடுத்த அவருக்கு எம் அகவணக்கத்தைச் செலுத்துவோம் எனக்கூறினார். தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

திருமறைக் கலாமன்றத்தை ஸ்தாபித்து கலைப்பணி செய்த கலாநிதி மரியசேவியர் அடிகளார் தேகவியோகம் அடைந்துவிட்டார். அவரின் இழப்பு கலையுலகிற் குப் பேரிழப்பாகும் என்றார்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்குச் சிறப்பான முறையில் கற்பித்து மாணவச் செல்வங்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்த ஆசிரியர் வே. அன்பழகன் காலமாகிவிட்டார்.

அவரின் மறைவு எங்கள் வருங்கால மாணவச் செல்வங்களுக்குப் பேரிழப்பாகும். அவரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் கூறினார்.

இம் மூவருக்காகவும் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்துவோம் எனப் பண்டிதர் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

அகவணக்கத்தோடு ஆலடியில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** அது சரி, யாழ்ப்பாணத்தில கொரோனாத் தொற்று எப்படி இருக்குதாம்.

**மூப்பர்:** பி.சி.ஆர். சோதனை முடிவுகளிலும் தில்லு முல்லு நடக்கிறதாகக் கேள்வி.

**கங்காணி:** பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் தில்லு முல்லு நடந்தால் எல்லாம் அம்போதான். எதுக்கும் நாங்கள் வாய் பக்குவம் எண்டிருக்கிறதுதான் நல்லது.

**சாத்திரியார்:** என்ன கங்காணியார் சொல்லுறியள் எனக்கெண்டால் ஒண்டும் விளங்கல்ல.

**கங்காணி:** பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் பற்றி ஏதேனும் சொன்னால் அது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தும்.

பிறகு ஆலடிக்கு வந்து உங்களிட்ட எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை செய்யவேணும் எண்டால் நாங்கள் சம்மதிக்கத்தான்வேணும். பிறகு கொரோனா பொசிற்றிவ் எண்டு சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும்.

**சிறாப்பர்:** கங்காணியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. எதுக்கும் சுகாதாரப் பகுதியோட பகைக்காமல் இருக்கிறதுதான் இப்போதைக்கு நல்லது.

**வாத்தியார்:** அதுசரி, புத்தாண்டுக்கு முன்னதாக யாழ்ப்பாணம், திருநெல்வேலியில உள்ள கடைகளைத் திறக்க அனுமதிப்பினமோ.

**கங்காணி:** நான் எண்டால் நினைக்கல்ல நடக்குமெண்டு.

**மூப்பர்:** அப்ப இந்தப் புத்தாண்டு எங்கட வர்த்தகர்களுக்கு ஆதாயக்குறைவைத்தான் காட்டுது போல.

**சாத்திரியார்:** இது கலியுகம் பாருங்கோ. எல்லாம் வில்லங்கமாகத் தான் இருக்கும்.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** தேங்காய் எண்ணெயில புற்றுநோய்க்குரிய பதார்த்தம் கலந்திருக்குது எண்டால் எங்கட நிலை என்ன?

**கங்காணி:** தேங்காய் எண்ணெய்க்குள்ள மட்டும் புற்றுநோய்க்குரிய பதார்த்தம் கலந்திருக்குது எண்டால் பரவாயில்லை.

மாறாக சாப்பாட்டுப் பொருட்களில நஞ்சு கணிசமாகக் கலந்திருக்குது எண்டால் நாங்கள் நஞ்சைத்தானே சாப்பிடுகிறம்.

**சாத்திரியார்:** பாழாய்ப்போன உலகத்தில ஒண்டும் செய்ய முடியாமல் இருக்குது. ஒரு புறம் நஞ்சை உணவாகச் சாப்பிடுறம். இன்னொரு புறத்தில சேர்த்து வைத்த சொத்துக்களைக் கபளீகரம் செய்யிற கள்ளர் கூட்டம்... என்னெண்டு இந்தப் பூமியில வாழுறது.

**விதானையார்:** சாத்தியார் சொல்லுறது உண்மைதான். அண்மையில என்ர பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்தன். அவர் ஐந்தாறு கோழி வைத்திருந்தார்.

என்ன கோழி வாங்கிக்கொண்டு போறியளோ எண்டு கேட்டன். இல்லைப் பாருங்க எங்கட வீட்டில நிண்ட கோழிகளை ஒருத்தன் திருடிக் கொண்டு போய் கோழி இறைச்சி விக்கிற இடத்தில குடுத்திட்டான்.

தகவல் அறிஞ்ச நான் போய் அந்தக் கோழிகளை மீட்டுக்கொண்டு வாறன் எண்டார். அந்தளவிலதான் இப்ப யாழ்ப்பாண நிலைமை இருக்குது.

இப்படி விதானையார் சொல்ல, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.




## பி.சி.ஆர். பரிசோதனையிலும் தில்லு முல்லு நடக்குதாமோ!

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறல்களுக்கு சட்டப் பாதுகாப்பு

## இலங்கைக்கான எச்சரிக்கை



**போர்** வீரர்களைப் பாதுகாக்கின்ற வகையில், புதிய அரசியலமைப்பில் சட்டம் கொண்டுவரப்படும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம்மீது, வாக்கெடுப்பு நடப்பதற்கு முதல் நாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவித்திருந்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்ற நிலையில், அதில் படைவீரர்களைப் பாதுகாக்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனை ஒரு வகையில், ஜெனிவா தீர்மானத்துக்குப் பதிலடி கொடுக்கும் ஒரு நகர்வாகவும் எடுத்துக்கொள்ள முடியும்.

ஏனென்றால், ஜெனிவா தீர்மானத்தின் முக்கியமான அடிப்படையே, போர்க்கால மீறல்கள் குறித்து விசாரித்துப் பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதுதான்.

அத்தகைய பொறுப்புக்கூறலின் மூலம்தான், இலங்கையில் நிலையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்பது சர்வதேச சமூகத்தின் கருத்தாக உள்ளது.

அதனை வலியுறுத்தியே, ஜெனிவாவில் இதுவரை தீர்மானங்கள் முன்னகர்த்தப்பட்டிருக்கின்றன.

இந்தமுறை கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தில், போர்க்காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து, ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்து, பாதுகாப்பது முக்கியமான அம்சமாக கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பணியகம் இதற்கென ஒரு கட்டமைப்பை உருவாக்கி செயற்படுத்த வேண்டும்.

மத்திய தகவல் சேகரிப்பு கட்டமைப்பின் மூலமான இந்த நடவடிக்கை, எதிர்காலத்தில் போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்ற விசாரணைகளுக்கு வருகின்றபோது, தேவையான ஆதாரங்களை, முழுமையான சட்ட வலுவுடன் சமர்ப்பிக்கும் நோக்கிலேயே இந்த தகவல் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது பாதிக்கப்பட்டவர்களை முழுமையாக திருப்திப்படுத்தக் கூடியதொன்றாக இல்லாவிடினும், இலங்கை அரசாங்கத்தினால் உதாசீனம் செய்யக் கூடியதொரு விடயமாக இருக்க முடியாது.

ஏனென்றால், எதிர்கால விசாரணைகளுக்கான ஆதாரங்களைத் தேடித் திரட்டி, வைத்திருக்கும் நிலையானது, எந்த நேரத்திலும் வெடிக்கக் கூடிய ஒரு குண்டுக்கு மேல் உறங்குவதற்கு சமமானது.

எனவே தான், இலங்கை அரசாங்கம் அவசரமாக ஒரு மறுத்தான் நடவடிக்கையை எடுக்கத் தயாராகியுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து படையினரைப் பாதுகாக்கும் வகையில் சட்டத்தைக் கொண்டு வரவுள்ளது அரசாங்கம்.

இந்தச் சட்டம் எவ்வாறானது, அதன் உள்ளடக்கங்கள் என்ன என்பது பற்றிய எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் இந்தமுறை தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய பிரித்தானியாவின் முன்மாதிரியைப் பின்பற்ற முனைவதாக அமைச்சர் பீரிஸ் கூறியிருக்கிறார்.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள, வெளிநாட்டு நடவடிக்கைகள் **(The Overseas Operation)** சேவைப் பணியாளர்கள் மற்றும் படைவீரர்கள்**(Service Personnel and Veterans)** சட்டத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பிரித்தானிய தீவுகளுக்கு வெளியே நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரித்தானிய போர் வீரர்களுக்கு எதிராக உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது, அதிலிருந்து பாதுகாப்பளிக்கும் வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கியதே இந்தச் சட்டம்.

இலங்கை அரசாங்கம் கொண்டு வரவுள்ள சட்டத்துக்கும் பிரித்தானியா கொண்டு வரவுள்ள சட்டத்துக்கும் இடையில் பிரதான வேறுபாடு ஒன்று உள்ளது.

அது உள்ளடக்கம் சார்ந்த விடயமல்ல, அடிப்படை சார்ந்த விடயம்.

பிரித்தானியா தனது சட்டத்தின் மூலம் சேவைப் பணியாளர்கள் மற்றும் போர் வீரர்களுக்கு பாதுகாப்பை தேடிக் கொடுத்திருப்பது உள்நாட்டில் மனித உரிமைகளை மீறுகின்ற போது அல்ல.

வெளிநாடுகளில் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் போது பாதுகாப்பளிக்கும் வகையிலேயே இந்தச் சட்டத்தை பிரித்தானியா இயற்றியிருக்கிறது.

ஆனால் இலங்கை அரசாங்கம் கொண்டு வரவுள்ள சட்டம் உள்நாட்டில் மனித உரிமை மீறல்களில் தொடர்புபட்ட படையினரைக் காப்பாற்றுகின்ற நோக்கத்தைக் கொண்டது.

உள்நாட்டில் அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டம் உள்ளது. அதனை விட இராணுவத்தினர் மற்றும் முப்படையினர் பணியில் ஈடுபடுகின்ற போது ஒழுக்க மீறல்களில் ஈடுபட்டால் அவர்களைத் தண்டிப்பதற்கான இராணுவச் சட்டமும் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் மூன்றாவதாக ஒரு சட்டத்தை உருவாக்க அரசாங்கம் எத்தனிக்கிறது.

இந்தச் சட்டம் உள்நாட்டில் மீறல்களில் ஈடுபட்ட படையினரைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் வகையில் கொண்டு வரப்படவுள்ளது தான் முக்கியமான விடயம்.இதனை சர்வதேசம் இலகுவான விடயமாக எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை.

ஏனென்றால் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் ஒரு இராணுவத்தை பாதுகாக்கின்ற சட்ட கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதை சர்வதேச சமூகம் விரும்பாது.

அதுவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னெடுப்பில், போர்க்கால மீறல்கள் குறித்த ஆதாரங்களை திரட்டி சேகரிக்கும் நடவடிக்கை' முன்னெடுக்கப்படுகின்ற போது இவ்வாறான எதிர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை தமக்கு எதிரான நகர்வாகவே மேற்குலக சமூகத்தினரால் கவனத்தில் கொள்ளப்படும்.

இலங்கை அரசாங்கம் படையினரைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்ட ஏற்பாட்டைக் கொண்டு வர முயன்றால், அது அவர்களை நாட்டின் தனித்துவமான சிறப்புரிமை பெற்ற தண்டனை விதிக்க முடியாத ஒரு தரப்பாக அடையாளப்படுத்தும்.

மிருசுவில் படுகொலை வழக்கின் மரணதண்டனை விதிக்கப்பட்ட சார்ஜன்ட் சரத் ரத்நாயக்கவை பொது மன்னிப்பு அளித்த ஜனாதிபதி விடுத்ததை சர்வதேச சமூகம் நீதிக்கு முரணான செயலாகவே அடையாளப்படுத்துகிறது.

எனவே படையினரைப் பாதுகாக்கும் சட்டம் நாட்டின் ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகவும் மாறக்கூடும்.

ஏனென்றால் இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் ஜனநாயக நாடுகளில் இருக்க முடியாது. மீறல்களை நிகழ்த்துவோருக்கு எதிரான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி உறுதிப்படுத்திக் கொள்வது தான் ஒரு ஜனநாயக அரசின் கடப்பாடாக இருக்கும்.

மாறாக குற்றமிழைத்தவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவது ஆபத்தானது.

இது சர்வாதிகார ஆட்சி நடக்கின்ற இராணுவ ஆட்சி நடக்கின்ற நாடுகளில் உள்ள நடைமுறை.

அங்கு தான் மீறல்களில் ஈடுபடுபவர்கள் தண்டனை விலக்குரிமை பெறுவார்கள். அவர்களால் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்ள முடியாமல் தப்பிக்க முடியும்.

இலங்கையும் அவ்வாறானதொரு சட்டத்தை உருவாக்கப் போகிறது என்றால், அது இராணுவ ஆட்சிக்கான சர்வாதிகார ஆட்சிக்கான அடையாளமாகவே பார்க்கப்படும்.

கடந்த வாரம் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஹ ஒஸ்ரின் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்துப் பேசியிருந்தார். அதற்குப் பின்னர் அவர் கூறிய விடயம் கவனத்தில் கொள்ளத்தக்கது.

உலகில் எந்த நாடாக இருந்தாலும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதும் அமெரிக்காவுக்கு முக்கியம் என்று அவர் கூறியிருந்தார்.இது இலங்கைக்கான எச்சரிக்கை தான்.

மனித உரிமை மீறல்களை சட்டரீதியான பாதுகாப்புடன் முன்னெடுக்கக் கூடிய ஒரு நாடாக இலங்கை மாறுகின்ற போது சட்டத்தின் ஆட்சி சிதைவடைந்து விடும்.

அவ்வாறான நிலையை நோக்கித் தான் நாட்டைக் கொண்டு செல்ல முனைகிறது அரசாங்கம். அந்த நிலை ஏற்பட்டால் அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடுகள் தவிர்க்க முடியாது போய்விடும்.

சுபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆந்தைகளின் மொழி



"தங்கள் கட்டளைப் படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீர்பால் பதிலளித்தார். "பீர்பால்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை.

நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப் படுகிறேன்" என்றார். "ஆகட்டும் பிரபு!" என்றார் பீர்பால்.

சற்று நேரத்திற்குப் பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பாலும் அக்பருடன் சென்றார்.

காட்டினுள் நுழைந்த பிறகு, அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்தச் சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சலடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்த போது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது.

புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாக முற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பாலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# மகாபாரதம்




### பாஞ்சாலி வாதம்

தேர்ப்பாகன் பாஞ்சாலி வாழ் இடத்திற்குச் சென்றான். அவளிடம் "அம்மா தரு மர் மாமன் சகுனியி டம் மாயச்சூதாடி பொருளையெல்லாம் இழந்து, நாட்டையிழந்து தம்பியரை இழந்து, பந்தயப் பொருளாக வைத்து தம்மையும் இழந்தார் தாயே! உன்னையும் பணயம் வைத்து தோற்றார். எல்லோரும் கூடியிருக்கும் அவைக்கு உம்மை அழைத்து வருமாறு எம் அரசன் என்னை பணித்தான்" என்றான்.

தேர்ப்பாகன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பாஞ்சாலி "சூதர் சபையில் மறக்குலத்து மாதர் வருதல் மரபோ? யார் கட்டளையால் என்னை அழைத்தாய்" என்றாள்,

அதற்கு அவன், "துரியோதன் மன்னன் கட்டளை" என்றான்.

"நீ சென்று நடந்ததை என்ன என்று கேட்டு வா சகுனியிடம் சூதாடியபோது தர்மர் என்னை முன்னே கூறி இழந்தாரா? அல்லது தம்மையே முன்னம் இழந்து பின் என் னைத் தோற்றாரா? இச்செய்தி தெரிந்து வா" என்று திரௌபதி தேர்ப்பாகனை திருப்பி அனுப்பினாள்.

தேர்ப்பாகனும் சபை சென்று "அரசே, என்னை முதலில் வைத்திழந்த பின்பு மன்னர் இழந்தாரா? மாறித் தமைத் தோற்ற பின்னர் எனைத் தோற்றாரா? என்று பேரவையில் கேட்டு வரச்சொல்லி அப்பொன்னரசி பணித்தாள். அதன்படி இங்கு வந்துள்ளேன்" என்றான்.


இது கேட்டு பாண்டவர் மனம் நொந்தனர். மற்ற மன்னர்களும் ஊமையராயினர்.

பாகன் உரைத்ததைக் கேட்டு துரியோதனன் சினத்தில் சீறினான். "என் பெருமையை அறியா தேர்ப்பாகனே, அவள் சொன்னதை இங்கு வந்து உளறுகிறாய். அந்தப் பாஞ்சாலி இங்கு வந்து பேசட்டும்" என்றான்.


தேர்ப்பாகனும் மீண்டும் பாஞ்சாலியிடம் சென்றான். ஆனால் திரௌபதியோ "தர்மர் தன்னை இழந்த பின்னால் என்னை இழந்திருந்தால் அது தவறு. அதற்கு அவருக்கு உரிமையில்லை. நீ மீண்டும் சென்று அதற்கான பதிலை அறிந்து வா" என்றாள்.

வருத்தத்துடன் தேர்ப்பாகன் "என்னைக் கொன்றாலும் இதற்கான விளக்கம் தெரியாது. நான் திரும்ப இங்கே வரப் போவதில்லை" என உறுதி கொண்டான் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**வயது வந்து மரணித்தாலும் மறு பிறப்பு உண்டா?**

**தமிழ்நாட்டின் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறதே?**

**சிவம் — வதிரி**

**மனம் விட்டுப்பேச ஆள் இல்லாதவர்கள் மனவருத்தத்துடன் வாழ்கிறார்களே வியாசரே?**

தொழில்நுட்பம் என்று வளர்ந்ததோ அன்று மனித மனங்கள் இறுகிக் கொண்டன என்பதே உண்மை.

பேஸ்புக்கில் ஐந்தாயிரம் சிநேகிதர்களை வைத்திருக்கிறேன் எனப் பெருமை கொள்ளும் ஒருவர் வீட்டில் உள்ள உறவுகளுடன் எவ்வளவு நேரம் அந்நியோன்னியமாக இருக்கிறார் என்றால் அதற்கு இல்லை என்ற பதிலே வரும்.

முகங்களை இறுக வைத்துக் கொண்டு தொலை பேசிக்குள் முகம் புதைத்துக் கிடக்கும் இந்தச் சமூகம் மீள்வதற்கு வாய்ப்பில்லை அவ்வளவே.

**வாணன் — யாழ்நகர்**

**தமிழ்நாட்டின் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறதே?**

ஏற்கனவே மாறி மாறி ஆட்சி செய்த தி.மு.க, அ.தி.மு.க ஆகியவற்றில் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கும் இந்நிலையில் கமல், சீமான் என புது வரவுகள் உண்மை-நேர்மை என முழக்கமிடுகின்றன.

இந்த முழக்கம் ஓரளவுக்கு தமிழ்நாட்டில் எடுபட ஆரம்பித்து விட்டது. எனினும் அந்த முழக்கம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் அளவில் இல்லை என்பதே உண்மை.

ஆட்சி அமைக்கப்போவது தி.மு.க அல்லது அ.தி.மு.க இரண்டில் ஒரு கட்சி என்பது முடிவு.

**ம.திருவரதராசா — வவுனியா**

**மக்கள் நலனுக்காக தங்களை அர்ப்பணிக்கும் அரசியல்வாதிகள் உண்டா?**

முன்னொரு காலத்தில் இருந்தார்கள் என்பது உண்மை.

ஆனால் இப்போது அப்படி யாரும் இருக்கிறார்களா என்று தேடித்தான் பார்க்க வேண்டும்.

இப்போதெல்லாம் வாகன போமிற்றுக்கு முண்டியடிக்காதவர்கள் யாரும் இருக்கிறார்களா என்ன?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது சாத்தியமானதா வியாசரே?**

தம்பி தமிழ் வடக்கு-கிழக்கு பிரிப்பிற்குப் பின்னர் அது தனி மாகாணம் என்கின்ற நிலைக்கு வந்திட்டு.

இனி யார் நினைச்சாலும் அதை மாற்ற முடியாது.

தமிழினம் மட்டும் வடக்கு -கிழக்கை இணைக்க வேண்டும் என்று விரும்பி பயன் இல்லையே.

அதை எம் சகோதர இனமான முஸ்லிம்களும் விரும்ப வேண்டும்.

அவர்கள் விரும்பாத வரை சாத்தியம் இல்லைத் தம்பி.

**நிலாஜினி — சுழிபுரம்**

**உமக்கு வேறு வழிபாடுகளில் நம்பிக்கை உண்டா வியாசரே?**

வேறென்றால் புரியவில்லை. மதங்கள் வேறுபடலாம். கடவுள்கள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அவை அனைத்தும் ஒன்றையே போதிக்கின்றன.

அந்த ஒன்று "அன்பு". மதம் என்ற பெயரில் இனவாதம் பேசுபவர்களை நாம் இப்போது காண்கின்றோமல்லவா?

இதை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது.

எந்த மதத்தவரிடமும் போய்க் கேளுங்கள் கடவுள் எங்கு இருக்கிறான் என.

அவர்கள் கை வானத்தையே சுட்டி நிற்கும்.

**சசி — நெல்லியடி**

**வயது வந்து மரணித்தாலும் மறு பிறப்பு உண்டா?**

மறு பிறப்பிற்கு வயது முக்கியமல்ல. செய்யும் கர்மாவே முக்கியமானது.

இருக்கும் காலத்தில் மற்றவரை மதிக்காமல் அவர் மனம் தனை அறியாமல் பணம் பணம் என மனிதத்தை புதைத்து பணம் தேடி அதை வட்டிக்கு விட்டு அது குட்டி போட அந்தக் குட்டியை வட்டி தேட விட்டு நிம்மதியை இழந்து- இழுத்து இறந்தால் மறு பிறப்பு உண்டு.

**சுதன் — குப்பிழான்**

**புலம்பெயர் அமைப்புகளை தடை செய்த இலங்கை அரசு, விசாரணைக்கு வரும். ஐ.நா.குழுவை கைகுலுக்கி வரவேற்குமா?**

என்னது கைகுலுக்கி வரவேற்பதா?

இதை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேள்விப்பட்டால் பொங்கி எழுந்து விடுவார்.

ஐ.நா. அல்ல எவருக்கும் இங்கு வேலை இல்லை. இது எங்கள் நாடு. இங்கு நாம் வைத்ததுதான் சட்டம். நாம் செய்வதுதான் சரியானது. எமக்கு யாரும் அறிவுரை சொல்லத் தேவையில்லை.


விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்படி பொங்கிக் கொதித்து விடுவார் அந்த மனிதன்.

**தாரு — வடமராட்சி**

**கொரோனா தன் வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டது போல இருக்கிறதே?**

தம்பி தாரு கொரோனா தன் வேலையை எப்போதோ காட்டத் தொடங்கி விட்டது. நீங்கள் தான் தாமதமாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

கொடிய கொள்ளை நோய் எனும் பயம் இல்லாமல் எவ்வளவு ஆட்டம் போட்டீர்கள். ஏதோ பொலிஸிற்காக முகக் கவசம் அணிவதும் மற்றைய நேரங்களில் அதைக் கவனிக்காமல் இருப்பதுமாக.இப்போது பற்றி விட்டது. இனி அணைக்க முடியாது தம்பி.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS மூலமாகவோ அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநீதியின் வெளிப்பாடே கொரோனா

ஏ! மனிதா– ஆள்பவனே!
உன் தீய எண்ணங்களிலிருந்து பிறந்ததே கொரோனா
பூமியில் வளங்கள் உருவாக்கி
மழை வெயில் காற்று தந்து
உயிரினங்கள் படைத்த இறைவன்
ஆறாம் அறிவோடு மனிதப் பிறப்பு
நீதி சமத்துவமில்லா ஆட்சி
மொழியால், மதத்தால் பேதங்கள்
நாடு நாடாய் அலையும் மக்கள்
நிம்மதியற்ற அவலவாழ்வு
தவறிழையா மக்கள் சிறுவர்களின் மரண ஓலம்
மகன் எங்கே எனக் கதறும் தாயுள்ளம்
நிம்மதியாக வாழும் உரிமை கேட்க
அடைபட்டு வதைபடும் இளைஞர் கூட்டம்
மன்னன் கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
ஆலயங்களில் இறைவனிடம் வேண்டுதல்
“மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை” வள்ளுவர் சொன்னது
எத்தனை நாள் அதிகாரம், ஆட்டம்
சுடுகாட்டில் உடல் எரியும்
உன் உயிர் நாளை எப்பிறப்போ
போராடுபவர்களில் ஒருவனாய் பிறப்பெடுக்கமாட்டாயா?
காவி உடைக்குள்ளே அன்பு, கருணை இல்லை
அதர்மவழிச் செல்வோரை நல்வழிப்படுத்துவது யார்?
தீய எண்ணங்களிலிருந்து புறப்படும் தீய கதிர்வீச்சு
அறவழி நின்றுநவமுற வாழா மனிதா
கொரோனா வந்தது இறைவன் சாபமோ!

**ம.திருவரதராசா.**
மில்வீதி. வவுனியா

## பேருந்து பேசுகிறேன்...



இது என்னுடைய கதை
சொந்தக் கதை
நிதர்சனமான கதை...
நான் ஒரு பயணிகள் பேருந்து...
தினந்தோறும் பக்குவமாய் பக்தியோடு தொடங்கி
சொந்த பந்தங்கள் ஊர் உறவுகள்
அறியாதோர் என்று பலரையும்
சுமந்து செல்வேன் சுத்தமான மனதோடு...

இனம் சனம் பேசும் எவ்வளவு கதைகள்
ஊர்ப்புதினங்கள் என்று
நிரம்பிவழியும் என் காதுகளில்...
எவ்வளவு மகிழ்ந்திருக்கிறேன்
மாணவர்களைக் கண்டால்
மகிழ்ச்சிக்கு அளவேயில்லை
நான் என்ன செய்ய? மானிடா!
உன் வேகத்தின் அசுரத்தனம்
நாளும் இன்னமும் அழுதுகொண்டிருக்கிறேன்
தனிமையில்...

எனக்கென்ன உங்கள் மீது கோபம்
நான் என்ன கோபக்காரனா?
பழிவாங்கும் எண்ணம் எனக்கில்லை
இரவு பகலாக ஓய்வு உறக்கமின்றி
உழைத்திருக்கிறேன் உங்களுக்காக...
ஓரளவுக்குத்தானே என்னாலும் முடியும்
வாய் பேசமுடிந்திருந்தால் நிச்சயமாக
குமுறி அழுதிருப்பேன்...

வாழ்க்கையில் ஏன் இந்த வேகமோ?
எனக்குத் தெரியாது
மானிடர்களே உங்களிடம் இருக்கலாம்
பழிவாங்கும் எண்ணம்
ஆனால் என்னிடமில்லை...
பேதம் பார்ப்பதும் எனக்குத் தெரியாது
எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது
நான் பழிகாரனா? கொலைகாரனா?
உங்கள் இரத்த வெள்ளத்தில் நீந்துவதிலும்
கொடுமை வேறுண்டோ எனக்கு?

**த.ஐங்கரதீபன்**
கிளி/ பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்

## எங்கள் கனவு சமஷ்டி

உரிமைகள் இழந்த
ஓரின மக்கள்
வேண்டும் விடயம்
சமஷ்டி ஒன்றே

உணர்வுகள் கொண்ட
தேசங்கள் இணைந்து
தட்டிக் கேட்டது
ஈழத்தின் அழுகையை

பல்லின மனிதர்
குடி கொண்ட நாட்டை
ஓர் இன பேதைகள்
ஆள்வது சரியோ?

உறவுகள் இழந்து
உரிமைகள் இழந்து
உணர்வுகள் இழந்தோம்
இத்திருநாட்டில்


காலங்கள் கடந்த
தமிழனின் ஆட்சி
சின்னங்கள் சிதைவுகள்
விளையுது இன்றும்

ஆயுதம் ஏந்திய
காலங்கள் கடந்து
அகிம்சை வழியில்
கேட்பது சமஷ்டி

எத்தனை சோகங்கள்
கடந்த தமிழன்
வேண்டும் சமஷ்டி
கிடைத்திடுமோ இக்கவியில்

**ந.விதுஷன்**
யா/கற்கோவளம்
மெ.மி.த.க.
பாடசாலை

## மௌனத்தின் தேடல்- 522



## போய்விடு

கொடிய அரக்கனே
உன்னோடு போராடி
உலகமே தோற்றுவிட்டது
ஓராண்டும் கடந்துவிட்டது
இன்னும் நீ ஓயவில்லை
போதும் போய்விடு
நாம் நிம்மதியாய் வாழ்வதற்கு

**வல்வைக்கமல்**

## மௌனத்தின் தேடல்- 523



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வென்றிடலாம் இந்நுண்ணங்கிதனை

தடம்மாறி நெறி பிறழ்ந்து வாழுகின்ற
சமுதாயம் நல்வழிப்படுத்தி சூழலையும்
தூய்மையாக்கிடவே உருவானது
இந்த பேராற்றல் மிகு நுண்ணங்கி
தனிமையில் சிந்தித்து என்ன பயன்?
ஒன்றுபட்டு சுகாதார வழிமுறையினைப்
பின்பற்றி நோயெதிர்ப்பு சக்தியினை கூட்டி
வென்றிடலாம் இந்நுண்ணங்கிதனை

**த.சிவா,**
நாவலர் வீதி

## கொரோனா ஊசிக்கு

கொரோனா ஊசிக்கு
கூனிக்கிடவாதே இயற்கை
உணவை மருந்தாக உண்
அளவோடு முறையோடு நீ
அனுசரித்து வாழ் கொவிட்–19
உனை அணுகாது நம்பிக்கை
ஒன்றே நலம் காக்கும் வந்து
தினை விதைத்தால் தினை தாமே

**வைகதள்**
**கொக்குவில்**

## கொடிய கொரோனா

உலகில் காதலுக்குச் சாதி மத பேதமில்லை
என்பார்கள் அது போல் இன்று
நம் உலகை ஆட்டிப் படைக்கும்
கொடிய கொரோனாவுக்கும்
மனித உயிர்களைப் பறிப்பதில்
சிறிதும் வேறுபாடு இல்லை
அதுவோ தான் வீசிய
மரணக் கயிற்றை இங்கே இப்படி
இழுத்து அறுத்துத் தப்பிக்க
நினைக்கும் மனிதர்களை வீரியமாய்த் தாக்கி
அவர்கள் கதை முடிக்க முயல்கிறது
உலகில் விஞ்ஞானத்தில் உச்சம் கண்ட
மனிதமோ அதனால் இன்று
விழி பிதுங்கி நிற்கிறது

**சுப்பிரமணியம் ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## சூறையாடிச் சுகம்

பிரபஞ்சத் தோற்ற மனைத்துமே
இறையின் படைப்பெனில் கொவிட்–19
அதுவும் அஃதே இயற்கை தன்னைச்
சமநிலைப்படுத்த எடுத்துவைத்த அடியிது
அகங்காரத்தாலே அனைத்தையும்
சூறையாடிச் சுகம் கண்டாய் மனிதா
இன்னுமா சமூகம் இயற்கைதான்
எனும் தத்துவம் புரியவை, புரிந்து கொள்

**கார்வண்ணன், காவலூர்**

## உயிர்கொல்லி


கொரோனா எனும் சின்னஞ்சிறு
பூச்சியாய்
உருவெடுத்து இவ்வையகம்
தனில் வந்துதித்து
பல வித்தைகள் புரிந்திட்ட
கொடூர அரக்கனே
[illegible]
[illegible]

**ஆ.பாலமதுஜா**
யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றமுறும் தமிழினம்

# எதையும் சாதாரணமாய் கடந்துபோகும் மனநிலை



ஒரு விடயத்திற்கு பழக்கப் படுவதற்கும் சர்வசாதாரணமாக கடந்து போவதற்கும் தமிழினத் தால் இலகுவாக மாறிவிட முடி கிறது என்பதே உண்மையானது.

போர்தந்த இழப்புக்களே இந்த மாற்றத்திற்கான காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

2009 இற்கு முற்பட்ட காலத் தில் இனந்தெரியாத நபர்களின் சூட்டுக்கு இலக்காகி வகைதொ கையின்றி தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டது நினைவிருக் கலாம்.

காலை விடிந்தால் சேவலின் குரலிலும் குருவிகளின் இன்னி சையிலும் விழிக்கும் நிலை மாறி மரண ஓலங்களில் விழிக்கும் நிலை அது.

ஆம், விடிந்தவுடன் எங்கு யாரைச் சுட்டுப் போட்டுக்கிடக்கிறது என்ற செய்தியே மரண ஓலமாக இருக்கும்.

அந்தக் காலத்தில் இனந்தெரி யாதவர்களின் சூட்டுக்கு இலக் காகி இறந்தவர்கள் என ஐந்து, ஆறு பேரையாவது பத்திரிகைச் தினச் செய்தி தாங்கி வரும்.

வீதியில் செல்லும் போது அநாதரவாக சூட்டுக்கு இலக் காகி கிடக்கும் உடலத்தைக் கட ந்து அலுவலகம் செல்லும் அவ லம் கொஞ்சக் காலத்தில் அது தமிழினத்திற்கு பழகிப்போய் விட்டது என்றே கூறவேண்டும்.

வீதியில் பிணமா? அது ஒரு பக்கம் கிடக்கட்டும் என மறு பக்கமாகச் செல்லும் அளவில் நிலை இருந்தது.

அந்தக் காலங்களில் இரவு 6 மணிக்கெல்லாம் வீதிகள் வெறிச் சோடிவிடும். ஊரடங்கு மாலை 6 மணிக்கு அமுலானால் அடுத்த நாள் காலை 6 மணிக்கே ஊர டங்கு தளர்த்தப்படும்.

மாலை 6 மணிக்கிடையில் தமது அன்றாட வேலைகளை முடித்து வீடு வந்து சேரும் அளவிற்கு தமிழினம் தன்னைப் பழக்கப்ப டுத்திக் கொண்டது என்றால் நம்ப முடிகிறதா? ஆனால் அது தான் உண்மை.

வீட்டுக்கு வெளியே செல்ல வேண்டும் என்றால் அடையாள அட்டை எடுக்காமல் நகர முடி யாத நரக வாழ்க்கைக்கு தமிழி னம் பழக்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் யாரை யும் கைது செய்தால் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கும் அள வில் தமிழினத்தின் மாற்றம் இரு ந்தது எனலாம்.

இவ்வாறு தமிழினத்துக்கு எத ற்கும் பழக்கப்படும் தன்மை தன் பொருளாதார ஸ்திரத்தையே ஆட் டம் காண வைக்கும் நிலைக்கு வந்தபோது அதற்கும் தமிழினம் தன்னைப் பழக்கப்படுத்தியது என்றால் நம்பமுடியுமா?

ஆம், யாழ்ப்பாணத்துக்கும் கொழும்பிற்குமான தரைவழிப் பாதை தடைப்பட்டிருந்த காலம். எந்தப் பொருட்கள் யாழ்.குடா நாட்டுக்கு வரவேண்டும் என்றா லும் கப்பல்மூலமே கொண்டு வரப்படும் நிலை.

கப்பல்மூலம் கொண்டுவரப் படும் அத்தியாவசியப் பொருட்க ளின் விலை என்பது உச்சம் தொடும் நிலையில் இருந்தது.

அரிசி, ம... போன்ற அத்தி யாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்த விலையில் விற்கப்பட்டபோது அதற்கும் தமி ழினம் பழக்கப்பட்டு அந்த விலை கொடுத்து பொருட்களை வாங்கி யது எனின் இது சர்வசாதாரண மானதன்று.

மண்ணெண்ணெய், பெற்றோல் என்பன தேன் போத்தல் (குப்பி) அளவில் விற்கப்பட்டது எனின் நம்ப முடிகிறதா? ஆனால் அது உண்மையாக நடைபெற்றது என் பதை நம்பித்தானாக வேண்டும்.

செல்லடிக்கும் பொம்மர் அடிக் கும் சினைப்பருக்கும் மலக்கழிவு கொட்டலுக்கும் இவ்வாறு தமி ழினம் பழக்கப்படுத்திக் கொண்ட விடயங்களைச் சொல்லிக்கொ ண்டே போகலாம்.

தமிழினம் எதற்கும் பழக்கப் படுவதற்கு இயல்பான இனம் என இப்போது ஏன் சொல்கி றீர்கள் என நீங்கள் முணுமுணு ப்பது தெரிகிறது.

இப்போதைய கொரோனா வின் தாக்கத்திற்கும் தமிழினம் பழகிவிட்டது என்பதுதான் இப் போதைய புதுவரவு.

கடந்த வருடம் யாழ்.தாவடி யைச் சேர்ந்த ஒருவருக்குக் கொரோனா எனும் செய்தியைக் கேட்ட தமிழினம் மிகவும் விழித் துக் கொண்டது. இரண்டு மாதங் களுக்கு மேல் ஊரடங்கு.

யாரும் வெளியே வரமுடியாது. மரக்கறி முதல் அனைத்துப் பொரு ட்களும் வீட்டு வாசலுக்கே வந் தன.

ஒருவருக்குத்தான் வடக்கில் கொரோனாத் தொற்று.

ஆனால் தமிழினம் முகக்கவ சம் அணிவதில் இருந்து கைக ளைக் கழிவுவது முதல் சமூக இடைவெளியைப் பேணுவது, தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது என மிகவும் கடும் கட்டுப்பாட்டுடன் இருந்தது.

அதன்பின் கொஞ்சம் கொஞ் சமாக சகஜ நிலை வர மறுபடி யும் கொரோனாவுக்குப் பயப்ப டும் தன்மை அற்றுப்போக மீண் டும் கொரோனா மருதனார்மடம் சந்தைக் கொத்தணியாக உரு வெடுத்தது.

அடடா என அலர்ட் ஆன தமிழினம் மீண்டும் தன்னை அதிகூடிய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

அந்தக் கட்டுப்பாடு தளர்ந்து போக பின்பு மினுவாங்கொடை பிரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலைத் தொற்று என்று ஆட்டிப் படைக்க மீண்டும் தன்னை பாதுகாக்க தயாரானது தமிழினம்.

ஆனால் அவை எல்லாம் கொஞ்சக் காலங்களுக்கே என் றிருந்த போது, கொழும்பில் தாண்டவமாடியது கொரோனா.

அப்போது கூட யாரும் வடக் கிற்கு இது எப்பேற்பட்ட ஆப த்து என்பதைக் கருத்தில் கொள்ள வில்லை என்றே கூறவேண்டும்.

இந்த நேரத்திலேயே கொரோ னாத் தடுப்பூசித்திட்டம் ஆரம்ப மானது.

பல்வேறுபட்ட சந்தேகங்கள், பயப்பீதியுடன் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டாலும் அது நாடு பூராகவும் நடைமுறைக்கு வருவ தென்பது உடனடியாக சாத்தி யமாகி விடாது.

கொழும்பில் அநேகருக்கு தடுப் பூசி வழங்கப்பட்டுவிட்டது என்ற செய்தியை எச்சரிக்கை மணியாக எடுக்காத தமிழினம் மீண்டும் அசண்டையாய் இருந்தது.

இப்போது யாழ்.மாநகர சபை எல்லை சிவப்பு வலயமாக பிர கடனப்படுத்தும் அளவில் கொரோ னாவின் தாக்கம் அதிகரித்து விட்டது.

இது இவ்வாறிருக்க, தெற் கில் கொரோனா பரவும் விகி தத்தில் வீழ்ச்சி. வடக்கில் கொரோனா உச்சம் தொட்டிருக் கிறது.

எதற்கும் இலகுவில் பழக்கப் படும் தமிழினம் கொடிய கொரோனாத் தாக்கத்திற்கும் இலகுவில் பழக்கப்பட்டு விட் டதோ என்றே எண்ணத் தோன் றுகிறது.

ஆம், இப்போது யாரும் முகக் கவசம் ஒழுங்காக அணிவதும் இல்லை. சமூக இடைவெளி யைப் பேணுவதும் இல்லை.

யாழ்.நகர வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை ஏற்பாடு செய்த போது சனக்கூட்டம் நிறை ந்து வழிந்தது. இதில் சமூக இடை வெளியின்றி நெருக்கமாக மக் கள் பி.சி.ஆருக்கு முண்டி அடி த்ததை அவதானிக்க முடிந்தது.

ஆக, தமிழினம் எதற்கும் பழக் கப்படும் இனம் என்பதை இந்த கொரோனாவிலும் காட்டியுள் ளது என்பதே முடிவாகிறது.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்டிகிதேரா மர்மக் கடிகாரம்

**இந்த மர்மம், எகிப்தின் மம்மிகள் போலவோ, பிரமிடு போன்ற புராதன கட்டடக் கலைகள் போலவோ, சந்தேகங்களுக்கு உட்பட்ட மர்மங்களைக் கொண்ட ஒன்றல்ல. நூறு விழுக்காடு அறிவியல் அடிப்படைகொண்ட உண்மையான மர்மம். இன்றுவரை தீர்க்கப் படாமல் புதிராகவே இருக்கும் ஒன்று. அதில் என்ன ஒளிந்திருக்கிறது என்பதையே நாம் பார்க்கப்போகிறோம்.**

கி.மு 2ஆம் நூற்றாண்டில், சிசிலியின் 'சிராகுஸ்' நகரை 'ஹியரோ' மன்னன் ஆண்டுவந்தான். மணிமுடியொன்றைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க அவன் விரும்பினான். தன்னிடமிருந்த தங்கக்கட்டிகளை, ஆபரண வடிவமைப்பாளன் ஒருவனிடம் கொடுத்து, மணிமுடியைத் தயாரிக்கும்படி பணித்தான். தங்கக்கட்டிகளை உருக்கி, அழகானதொரு மணிமுடியை அவனும் உருவாக்கி முடித்தான். அரசனிடம் கையளித்த போது, அரசனுக்கு மணிமுடி பிடித்துப்போயிருந்தது.

ஆனாலும், மனதில் ஏதோவொரு நெருடலும் இருந்தது. தான் கொடுத்த தங்கம் அனைத்தையும் அவன் பயன்படுத்தாமல் ஏமாற்றி விட்டதாக எண்ணினான். தங்கத்துடன் வெள்ளியைக் கலந்திருக்கிறான் எனச் சந்தேகப்பட்டான். ஆனால், அதை ஆபரணத் தயாரிப்பாளனிடம் கேட்கத் தயங்கினான். கடவுளுக்கு அர்ப்பணிக்க நினைத்ததால், மணிமுடியில் வேறு உலோகங்களின் கலவை இருப்பதையும் அரசன் விரும்பவில்லை. அந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது



என்றும் அவனுக்குப் புரியவில்லை. அப்போதுதான், அதைத் தீர்க்கக் கூடிய ஒருவர் இருக்கிறார் என்று அரசனுக்குத் தெரியவந்தது. அந்த ஒருவர் வேறு யாருமல்ல.

கிரேக்க தேசத்தில், கி.மு 2ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கணிதவியல், இயற்பியல், வானியல் ஆகியவற்றில் சிறந்தவரான ஆர்க்கிமிடிஸ். இந்தப் பெயரைக் கேட்டதும் உங்கள் மனதில் ஒரு வியம் தான் தோன்றும். "ஒய்ரேகா... ஒய்ரேகா..." என்று கத்தியபடி, குளித்துக் கொண்டிருந்த நீர்த் தொட்டியிலிருந்து நிர்வாணமாக ஓடிய கோமாளி மனிதனின் உருவம் தோன்றும். ஆனால், அவர் அப்படியொன்றும் கோமாளி கிடையாது. அற்புதமான புத்திஜீவி. நம்பவே முடியாத கண்டுபிடிப்பாளன். அன்றைய கிரேக்கத்தில் அவர் சாதித்த பல விடயங்கள் உலகமறியாதவை.

ஆர்க்கிமிடிஸ், மன்னனால் அழைக்கப்புட்டார். பிரச்சினையை மன்னன் விளக்கமாகக் கூறினான். அதற்கான பதிலை உடனடியாக ஆர்க்கிமிடீஸால் சொல்ல முடியவில்லை. அதற்கான தீர்வுடன் மறுநாள் வருகிறேன் என மன்னனிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தார். பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்ற யோசனையுடன் குளியலறையின் நீர்த்தொட்டியில் இறங்கினார். நிரம்பியிருந்த தொட்டியிலிருந்து நீர்வழிய ஆரம்பித்தது. அப்போதுதான், "கண்டுபிடித்து விட்டேன், கண்டுபிடித்து விட்டேன்" என்று கத்தியபடி அரண்மனையை நோக்கி ஓடினார். ஆர்க்கிமிடிஸின் அந்தக் கோலத்தைக் கண்ட அரசன் சற்று அசந்துபோயிருக்கலாம். அது பற்றிய எந்த விபரமும் வரலாற்றில் இல்லை. அல்லது இந்த நிர்வாண ஓட்டச் சம்பவம்கூடச் சற்று மிகைப் படுத்தப்பட்டிருக்கலாம்.

ஆனால், அ[illegible]றுக்கொள்ள வேண்டியது, ஆர்க்கிமிடீஸின் கண்டு பிடிப்பையே. இன்று வரை இயற்பியல் கொணடாடும் விதி அது. அந்த விதி எதுவென்பதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. எட்டாம் வகுப் பிலேயே படித்திருப்பீர்கள். 'நீரில் அமிழும் ஒரு பொருள் வெளியேற்றும் நீரின் எடை, அந்தப் பொருளின் எடைக்குச் சமமாக இருக்கும்'. இதை வைத்து, அரசன் கொடுத்த தங்கத் தின் அளவு வெளியேற்றிய நீருடன், மணிமுடி வெளியேற்றிய நீரை ஒப்பிட்டு, ஆபரணம் உருவாக்கியவன் அரசனை ஏமாற்றியதை ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடித்துச் சொன்னார்.

ஆர்க்கிமிடிஸின் கண்டுபிடிப்பாக நாம் அறிந்து வைத்திருப்பவை அவ்வளவுதான். ஆனால், நாம் அறியாதவை பல. அவர் கண்டுபிடித்ததாக நவீன ஆராய்ச்சியாளர்கள் [illegible] சொல்லும் ஒன்றைப் [illegible] இப்போது பார்க்கப் போகிறோம்.

## மாயமில்லை மந்திரமில்லை

இந்த மர்மம், எகிப்தின் மம்மிகள் போலவோ, பிரமிடு போன்ற புராதன கட்டடக்கலைகள் போலவோ, சந்தேகங்களுக்குட்பட்ட மர்மங்களைக் கொண்ட ஒன்றல்ல. நூறு விழுக்காடு அறிவியல் அடிப்படை கொண்ட உண்மையான மர்மம். இன்றுவரை தீர்க்கப்படாமல் புதிராகவே இருக்கும் ஒன்று. அதில் என்ன ஒளிந்திருக்கிறது என்பதையே நாம் பார்க்கப் போகிறோம்.

கடலடியில் வாழும் ஒருவகை உயிரினத்தைப் 'பஞ்சுயிரி' (Sponge) என்பார்கள். அவற்றைச் சேகரித்து விற்பனை செய்யும் சுழியோடிகள் இருக்கிறார்கள். 1900 ஆம் ஆண்டு, கிரேக்க தேசத்தின் கீழேயிருக்கும் கடற்பகுதியில் பஞ்சுயிரிகளைச் சேகரிப்பதற்காகக் கப்பலில் சென்ற சுழியோடிகள் சிலர் நீரில் மூழ்கினார்கள். அவர்களில் ஒருவன் திடீரென மேலெழுந்து, கடல்மட்டம் வந்து கப்பல் தலைவனிடம், 'கீழே கை கால்கள் வெட்டப்பட்டு, உடற்பாகங்கள் சிதறியபடி மனித உடல்கள் கிடக்கின்றன' என்று திகிலுடன் சொன்னான்.

கப்பலின் தலைவனான, 'டிமிட்ரியோஸ் கொண்டோஸ்' கடலில் மூழ்கிப் பார்த்தான். அங்கே கிடந்தவை மனித உடலுறுப்புகள் தான். ஆனால், அனைத்தும் சிலைகளின் உடைந்த பாகங்கள். மேலும் தேடியபோது, அங்கே பெரிய கப்பலொன்று உடைந்து, பலவிதமான புதையல்கள் கடலடியெங்கும் சிதறிக் காணப்பட்டன. உடனடியாக கிரேக்க அரசின் கடற்படைக்கு அறிவித்தான். அங்கு வந்த கடற்படையினர் புராதன பொருட்களையெல்லாம் சேகரித்து, ஏதென்ஸின் தொல்பொருள் அருங்காட்சியகத்துக்கு அனுப்பிவைத்தார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கிரேக்கத்துக்குக் கீழேயிருந்த சிறு தீவொன்றுக்கு அருகில் கப்பலொன்று கடல் கொந்தளிப்பில் அகப்பட்டுப் புதைந்து போயிருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக தேர்தல் களம் யாருக்கு வெற்றி?

தமிழகம் இப்படியொரு சட்டமன்றத் தேர்தலை இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை.

ஜெயலலிதா, கருணாநிதி என்கிற இருபெரும் ஆளுமைகள் இல்லாமல் இரண்டு கழகங்களும் எதிர்கொள்ளும் முதல் சட்டமன்றத் தேர்தல் இது.

புதிதாகக்களத்துக்கு வந்திருக்கும் அ.ம.மு.க., மக்கள் நீதி மய்யம் கட்சிகளின் தாக்கம் களத்தையே மாற்றியமைத்திருக்கிறது.

மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி, டி.டி.வி.தினகரன், கமல்ஹாசன், சீமான் என ஐந்து முதல்வர் வேட்பாளர்கள் தமிழகத்தின் குறுக்கும் நெடுக்குமாக வலம் வந்து பிரசாரம் செய்கிறார்கள்.

தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள், 6.36 கோடி பேர். ஆண் வாக்காளர்கள் 3.08 கோடி பேரும் பெண் வாக்காளர்கள் 3.18 கோடி பேரும் உள்ளனர். இவர்களில், முதன்முறையாக வாக்களிக்க இருக்கும் 8.97 இலட்சம் இளைஞர்களும் அடக்கம்.

இந்த 2021 சட்டமன்றத் தேர்தல் களத்தில், மக்களின் நாடித்துடிப்பை அறிவதற்காகக் களமிறங்கியது ஜூனியர் விகடன். 468 தன்னார்வலர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள், 117 நிருபர்கள் எனப் பெரும் படையே சென்று 234 தொகுதிகளிலும் கருத்துக்கணிப்பு நடத்தியது.

விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், இல்லத்தரசிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், திருநங்கைகள் எனப் பல்வேறு தரப்பிலும் சுமார் 50,000 வாக்காளர்களிடம் இந்த மெகா கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

சர்வதேச அளவில் அறிவியல் பூர்வமாக பின்பற்றப்படும் விதிகளின் அடிப்படையில் இந்தக் கருத்துக்கணிப்புக்கு ஒவ்வொரு தொகுதியிலும் கவனமாக வாக்காளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.


பாலின விகிதம், வயது, வசிக்கும் பகுதி கிராமமா, நகரமா என்ற அடிப்படையில் வாக்காளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

வாக்காளர்களின் மனநிலையைத் தெளிவாக அறியும் வகையில் கருத்துக் கணிப்பு படிவம், ஏழு கேள்விகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

தமிழகத்தில்ஆட்சிமாற்றம்தேவையா...? யார் முதல்வராக வர வேண்டுமென விரும்புகிறீர்கள்...? தமிழகத்தில் எந்தக் கட்சி/கூட்டணி வெற்றி பெறும்...? எதிர்காலத்தில் யார் முக்கிய தலைவராக இருப்பார்...? யாருக்கு வாக்களிக்க விரும்புகிறீர்கள்...? தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும்...? உங்கள் தொகுதியில் எந்தக் கட்சி ஜெயிக்கும் ஆகியவையே அந்தக் கேள்விகள்.

பல தொகுதிகளிலும் வித்தியாசமான கணக்குகளும் விநோதமான பிரச்சினைகளும் தேர்தல் முடிவுகளையே மாற்றுவதாக இருக்கும் சூழலில், இந்தக் கருத்துக்கணிப்பு சவாலானதாகவே இருந்தது.

அதேசமயத்தில், சுவாரசியங்களுக்கும் பஞ்சமில்லை. பாபநாசம் தொகுதிக்குச் சென்றபோது, வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்த விவசாயக் கூலிகள் பலரும் ஆர்வத்துடன் வந்து கருத்து



தெரிவித்தனர்.

பெரியகுளத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர், "இந்தமுறை காசு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஜனங்க எல்லாம் ஒரு முடிவெடுத்துட்டுத்தான் இந்த பிரசாரக் கூத்தையெல்லாம் பார்த்துட்டு இருக்காங்க" என்றபடி நம் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

பணத்தையும் தாண்டி, வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள், தனிநபர்களின் வருவாயைப் பெருக்குவதற்கான வழிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் கட்சிகளை எடைபோடுவதைக் களத்தில் பார்க்க முடிந்தது.

கூடலூர் தொகுதிக்குட்பட்ட தேயிலைத் தோட்டங்களில் பெண்கள் பலர் தேயிலை பறித்துக்கொண்டிருந்தனர். அவர்களிடம் கேட்டபோது, "30 வருடமா ஓட்டுப் போட்டு ஒரு புண்ணியமும் இல்ல.

இப்பவரை நல்ல தண்ணி, கரன்ட் எதுவுமே கெடையாது. வேலை வாய்ப்பைக் கொடுத்தா போதும். ஆட்சிக்கு வர்ற யாருமே அதைச் செய்யலை. புதுசா யாராவது வந்தா நல்லா இருக்கும்" என்றார் ஒரு பெண்மணி.

நன்னிலம், திருத்துறைப்பூண்டி தொகுதிகளுக்குப் போனபோது, "எதிர்காலத்தில் யார் முக்கிய தலைவராக இருப்பார் என்ற பட்டியலில் திருமாவளவன் பெயர் இல்லையே?" என்று கோபித்துக்கொண்டார்கள். மதுரை பகுதிகளில், டாக்டர் கிருஷ்ணசாமி பெயரை வாக்காளர்களே எழுதினார்கள். வில்லிவாக்கம் தொகுதியில் ஒரு வாக்காளர், "ஏன் டி.ராஜேந்தர் பெயரைச் சேர்க்கவில்லை" என்று வாதிட்டார்.

சோழவந்தான் தொகுதியில் சர்வே படிவங்களுடன் தெருக்களுக்குள் சென்றதும் ஓடிவந்த முதியவர் ஒருவர், "ஓட்டுக்குப் பணம் கொடுக்க வந்தீங்களா?" என்று கண்கள் மிளிர்ந்தார்.

அவரைச் சமாளித்து பதிலைப் பெற்றது சுவையான அனுபவம். திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை தொகுதிக்குட்பட்ட கிராமப்புறப் பகுதிகளில், அரசின் திட்டங்கள் சென்றடைந்ததை மக்கள் வரவேற்கிறார்கள்.

நம்மிடம் பேசிய மூதாட்டி ஒருவர், "முதியோர் ஓய்வூதியம் எல்லாம் நேரத்துலேயே ஏத்திடுறாங்க. ஆறு சிலிண்டர் இலவசமா தர்றதா அ.தி.மு.க.தேர்தல் அறிக்கையில சொல்லியிருக்காங்க. இதெல்லாம் பெண்கள்கிட்ட வரவேற்பை ஏற்படுத்தியிருக்கு" என்றார். விழுப்புரம் மாவட்டம்.

வானூர் தொகுதியில் பூ கட்டிக் கொண்டிருந்த சிலர், "விலைவாசியெல்லாம் ராக்கெட் வேகத்துல ஏறிடுச்சு. ஆறு சிலிண்டர் இலவசம்னு சொல்றவங்க, விலை ஏத்தும்போது வாய்மூடி மௌனமாத்தானே இருந்தாங்க.

ஏற்கனவே நாலரை இலட்சம் கோடி ரூபாய் கடனிருக்கு. இந்த இலவசக் கணக்கை எதுல போய் எழுதுறது?" என்றார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம், பட்டவர்த்தி அருகே விவசாயி ஒருவரிடம் பேசும்போது, "தி.மு.க.ஆட்சியில் நன்றாக இயங்கிக் கொண்டிருந்த சர்க்கரை ஆலையை மூடிட்டாங்க.

அதனால இந்தச் சுற்றுவட்டாரத்தில் வியாபாரம் இல்லை. பணப்புழக்கம் இல்லை. அந்த ஆலையை மீண்டும் திறக்கறதுக்காக நான் ஓட்டுப் போடுவேன்" என்றார்.

நாம் தமிழர் கட்சிக்கு தமிழகம் முழுவதும் கணிசமான அளவுக்கு இளைஞர்களிடம் வரவேற்பு இருப்பதைப் பார்க்க முடிந்தது. அதேபோல, நகர்ப்பகுதிகளில் மக்கள் நீதி மய்யம் கட்சி தன்னுடைய ஆதரவு வட்டத்தைப் பெருக்கியிருக்கிறது.

பல வாக்காளர்கள் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல்நலனை நம்மிடம் விசாரித்தது ஆச்சர்யமளித்தது.

சின்னக் கூட்டணிக் கட்சிகளுக்கு, சின்னமே பிரச்சினையாக இருப்பது இந்த சர்வேயில் நமக்குப் புரிந்தது. பானைச் சின்னத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுவது சிறு சறுக்கலை அந்தக் கட்சிக்கு அளித்திருக்கிறது.

இந்த வித்தியாசத்தை, ம.தி.மு.க. வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகளில் பார்க்க முடிகிறது.

தென்மாவட்டங்களிலும் டெல்டா பகுதியிலும் அ.ம.மு.கவின் தாக்கம் அதிகமிருப்பது நமது கருத்துக்கணிப்பு முடிவுகளில் எதிரொலிக்கிறது.

அந்தப் பகுதிகளில் கணிசமான எண்ணிக்கையில் அ.தி.மு.க.வெற்றி வாய்ப்பைப் பறிகொடுப்பதற்கு அ.ம.மு.க. பிரதான காரணம்.

பா.ஜ.க.கூட்டணியால் அ.தி.மு.க வுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதை யும் இந்த முடிவுகள் உணர்த்துகின்றன. சொந்தச் செல்வாக்கு, இரட்டை இலைக்கு என இருக்கும் வாக்கு வங்கி.

| யாருக்கு எத்தனை சீட்? | |
|---|---|
| கூட்டணி வாரியாக | |
| தி.மு.க கூட்டணி | 163 |
| அ.தி.மு.க கூட்டணி | 52 |
| அ.ம.மு.க கூட்டணி | 0 |
| ம.நீ.ம கூட்டணி | 1 |
| நாம் தமிழர் | 0 |
| இழுபறிநிலை | 18 |
| மொத்தம் | 234 |



ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு...”

**“பல வண்ணப் பறவைகளும் பரந்த நீர்ப் பரப்பும் பசுமையான மலைகளும் பாசமிகு உறவுகளுமே மனித மனத்திற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருகின்றன. ‘கடுகு சிறுத்தாலும் காரம் போகாது’ என்ற முதுமொழிக்கிணங்க, பறவை இனத்தில் சிட்டுக்குருவிக்கென்று எப்பொழுதுமே தனியிடம் உண்டு. சுறுசுறுப்புக்குப் பெயர் போன பறவை அது. ‘எனவேதான், சுறுசுறுசுறுப்பாக வேலை செய்பிறவர்களைப் பார்த்து ‘சிட்டா பறக்கிறாங்க’ என்று அழைப்பது வழக்கத்திற்கு வந்தது. அதோடு மட்டுமல்லாது, ஏழைகளின் குடிசைகளிலும் ஏகாந்தமாய் வாழும் பறவை இதுவென்பதால், இது எளியோரின் பறவையாகும்.”**

பரந்த இவ்வுலகில் மனிதர்கள் 100-120 ஆண்டுகள்வரை வாழலாமென்றாலும், நூறைத் தாண்டி வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைவுதான். மனிதர்களின் அமைதி வாழ்வுக்குத் துணையாய் நிற்கும் இச்சிறிய பறவையினத்திற்கு இறைவன் விதித்தது 13 ஆண்டுகள் மட்டுமே என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.



அப்படியிருந்தும், தற்போதைய சூழலில் அவற்றின் ஆயுட்காலம் 4-5 ஆண்டுகளாகக் குறுகி விட்டதாகவும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 4 முதல் 8 அங்குலம் வரையே இவற்றின் வளர்ச்சி. 27 முதல் 39 கிராம்தான் இச்சிறு பறவையினத்தின் எடை. அதனால் தான் இவற்றிடம் உற்சாகத்திற்கும், உவகைக்கும் குறைவில்லையோ! ‘குறைந்த எடையே குதூகலத்திற்கு அடிப்படை’ என்று இவை நமக்குச் சொல்லாமல் சொல்கின்றனவோ?

குடிசைகளின் மரக் கம்புகள், மாடங்கள், பரண்கள், ஓடுகளின் இடைவெளி என்று கிடைத்த சிறு இடத்தில் நிறைவாக வாழும் சிறு பறவைகள் இவை. ‘சிறுகக் கட்டி பெருக வாழ்’ என்ற மூதுரையை நமக்கு உணர்த்தும் முத்தாய்ப்பான பறவைகள் இவை.

அடைக்கலாங்குருவி, ஊர்க்குருவி, வீட்டுக்குருவி என்ற வேறு பெயர்களும் இவற்றுக்கு உண்டு. சாம்பல் நிறத்திலும், சற்றே வெண்மை கலந்தும் இருக்கும் இவற்றில், ஆண் பறவைக்கு முகத்தில் சற்று அழுத்தமான கருமை உண்டு.

சங்க இலக்கியங்களும் சிட்டுக் குருவி குறித்துப் பேசுகின்றன. ‘மனையுறைக் குருவி’, ‘உள்ளுறைக் குருவி’, ‘உள்ளூர்க் குருவி’ என்றெல்லாம் பெயரிட்டு சங்க இலக்கியங்கள் சிலாகிக்கின்றன.

ஆண் குருவிகள் கூடுகட்ட, பெண் குருவிகள் 3-5 முட்டைகள் இட்டு, 12-15 நாட்கள் அடைகாத்து, குஞ்சுகளைப் பொறிக்குமாம். ஆண்டில் பலமுறை இவ்வாறு நடைபெறுமாம்.

கிராமங்களில் சேவலுக்கு அடுத்தபடியாக, அதிகாலையில் தங்கள் ‘கீச், கீச்’ சத்தத்தால் மக்களை எழுப்பி விடும் மாண்பைக் கொண்ட இப்பறவைகள், தற்போது அருகி வருகின்றன. போகிற போக்கைப் பார்த்தால், நமது வருங்கால சந்ததியினருக்கு இவற்றின் படங்களைக் காட்டியே விளக்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திணை, சாமை, கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்களை உணவாக உட்கொள்ளும் இவற்றுக்கு இப்பொழுது அவையெல்லாம் கிடைப்பது அரிதாகி விட்டது. புழு, பூச்சிகள், வெட்டுக் கிளிகள் போன்ற உயிரினங்களையும் இவை உண்ணும். பூச்சி மருந்து அடிப்பதால் அவற்றுக்கும் பஞ்சமேற்பட்டு விட்டதால் சிட்டுக் குருவிகளின் வாழ்க்கை கேள்விக் குறியாகி வருகிறது.

1950களில், சீனாவில் மக்கள் சிட்டுக் குருவிகளைத் தேடித்தேடிச் சுட்டார்களாம். அதன் காரணமாக, சிட்டுக்குருவிகள் தொகை பெருமளவில் குறைந்துவிட்டதாம். அதனைத் தொடர்ந்த ஆண்டுகளில், பூச்சிகள் மற்றும் வெட்டுக் கிளிகளால் பயிர்கள் பலத்த சேதமடைந்து விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாம்.

உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, உணவுப் பஞ்சத்தில் சுமார் 1.5 கோடி பேர் இறந்து போனதாக வரலாறு தெரிவிக்கிறது. சிட்டுக் குருவிகள் பாதுகாக்கப்பட்டிருந்தால், அந்தப் பஞ்சமே ஏற்பட்டிருக்காது என்கிறது வரலாறு. அண்மையில் இந்தியாவில் பெரும் அளவிலான வெட்டுக் கிளிகள் பயிர்களுக்கு நாசமேற்படுத்தியதும் ஈண்டு நினைவுகூரத்தக் கது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பானிலும் சிட்டுக்குருவிகள் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றன. சிட்டுக்குருவிகளின் அருமையை உலக நாடுகள் உணர்ந்துள்ளன. எனவேதான் அவற்றைப் பாதுகாக்க வேண்டி, 2010 முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20 ஆம் திகதி, ‘உலகச் சிட்டுக்குருவி தினமாக“ உலக நாடுகள் கொண்டாடி வருகின்றன.

தற்பொழுது அமெரிக்காவில் நாங்கள் குடியிருக்கும் வீட்டில் மகளும், மருமகனும் அதற்கென்று பல்கனியில் ஒரு கூண்டைத் தொங்கவிட்டு, தினமும் காலையில் அரிசியை வைக்கிறார்கள். அவை உண்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாலே மனது அமைதியாகிறது.

தமிழ்த் திரைத்துறையும் சிட்டுக் குருவியைப் போற்றத்தவறவில்லை. பெரும்பாலான திரைப்படங்களில் சிட்டுக்குருவி குறித்த பாடல்களை வைத்துப் பெருமைப்படுத்தினார்கள்.

கதாநாயகிகள் சிட்டுக்குருவிகளையே தோழிகளாகப் பாவித்து வந்தார்கள். வீடு திரும்ப தாமதப்படுத்தும் கணவனின் செயலை சிட்டுக் குருவியிடம் பகிர்ந்து கொள்ளும் விதமாக,

**‘சிட்டுக்குருவி சிட்டுக் குருவி சேதி தெரியுமா**
**என்னை விட்டுப் பிரிந்து போன கணவன் வீடு திரும்பல”**

என்று அஞ்சலி தேவி 1960 களில் சிட்டுக்குருவியிடம் தன் வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்.

**‘சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து சேர்ந்திடக் கண்டேனே**
**செவ்வானம் கடலலை மேல் கலந்திடக் கண்டேனே.’**

என்று பாடி, சரோஜாதேவி தன் காதலை சிவாஜிக்குத் தெரிவிப்பார் புதிய பறவையில்.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ,

**‘சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு**
**தென்றலே உனக்கேது சொந்த வீடு’**

என்று கூறி, தன் காதலை வெளிப்படுத்துவார் ‘சவாலே சமாளி’யில்.

“முதல் மரியாதை” சிவாஜி கணேசனோ,

**“ஜோடியோட வந்து விட்டத்தில் கூடுகட்டச் சொல்லுவதுடன், ‘பொண்டாட்டி இல்லை வந்து என்னோட பாடு.’**

என்று சிட்டைத் துணைக்கழைப்பார்.

இப்படி ஏகப்பட்ட பாடல்கள் தமிழ்த் திரைப்படங்களில் சிட்டுக் குருவியை மையமாக வைத்துப் பாடப்பட்டுள்ளன.

காதலுக்கும், சுறுசுறுப்புக்கும், உற்சாகத்திற்கும் உறைவிடம் மட்டுமல்ல சிட்டுக்குருவி, உயர் விளைச்சல்பெறவும் அதன் உதவி இன்றியமையாதது. ஏற்கனவே உலகில் தேனீக்கள் குறைந்து வருவதால், மகரந்தச்சேர்க்கை பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைவு ஏற்படுமென்று விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். இந்த நேரத்தில் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தால், நம் விவசாயிகளின் உழைப்பைப் புழு, பூச்சிகள் மற்றும் வெட்டுக்கிளிகள் வீணாக்கி, விளைச்சலைக் குலைத்து விடும்.

வீடுகளிலும், விவசாய நிலங்களின் அருகிலும் சிட்டுக்குருவிகள் வாழவகை செய்வோம். வீட்டில் கண்ணாடித்தொட்டியில் வளரும் மீன் நமக்கு மன அமைதியைத் தந்து, இதயநோயைக் குறைப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். அதைவிட அதிகமான மன அமைதியையும், உற்சாகத்தையும் சிட்டுக்குருவிகள் நமக்கு வழங்கி வருகின்றன என்பதே உண்மை.

அவற்றின் வாழ்வுக்காக நாம் செய்வது செலவல்ல. மூலதனம். ஆம். அவை நம்மை அமைதிப்படுத்துவதுடன் நம் விளைச்சலையும் பெருக்கிப் பட்டினிச் சாவிலிருந்து நம்மைக் காப்பாற்றுவது உறுதி.

சிட்டுக்குருவி காப்போம். சிறகடிப்போம் உற்சாகத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## எங்கே என் தந்தை

காலத்தின் பதிவு

64



சாண்டில்யன்

அந்த ஓட்டத்தில் அவள் வாழ்விலும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் வாழ்விலும் சம்பந்தப்பட்ட பாத்திரங்களும் வலம் வந்தார்கள். அப்படி வலம்வந்த சமயததில் அவன் இதயத்தைச் சுற்றிநின்ற பெரும் வலை திடீரென அறுந்தது. அந்தப் பாத்திரங்களின் சுழற்சியில் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றிய மனிதர் வரிசையில் அவள் தந்தை குணவர்மனும் தோன்றினார்.

எதற்காகத் தமிழகம் வந்தாய்? எந்த நிலையில் இருக்கிறாய்?" என்று ஏதோ குற்றத்தைச் சுட்டிக் காட்டுவதுபோல் அவள் மனக் கண் முன் எழுந்தது குணவர்மன் முகம். அதன் விளைவாகத் திடீரெனக் கட்டிலை விட்டு எழுந்த காஞ்சனா தேவி ஒருவிநாடி நின்ற இடத்தில் ஸ்தம்பித்து நின்றாள். பிறகு தலையைத் தானாக ஒருமுறை ஆட்டி விட்டுச் சரசரவென அறைக்குக் குறுக்கே நடந்து தூரத்திலிருந்த சாளரத்தை எட்டினாள்.

காஞ்சனாதேவி தன் கைகளின் பிடிப்பிலிருந்து சரேலென எழுந்ததும், அப்படி எழுந்ததால் கன்னங்களிலிருந்து நழுவிவிட்ட தன் கைகளை அவள் எழில்கள் தடை செய்யும் சிறிதும் இலட்சியம் செய்யாமல் கனவேகமாக அவள் தன்னை இடித்துத் தள்ளிக்கொண்டு சாளரத் தருகே சென்றுவிட்டதையும் கவனித்த இளைய பல்லவன் சற்றே வியப்பை மட்டுமல்ல வியப்பின் விளைவாக சற்று சுயநிலையையும் அடைந்தான். ஆகவே சாளரத்தை நோக்கி அவனும் நடந்து சென்றான். சாளரத்துக்கு வெளியே மனோ கரமான காட்சியே விரிந்து கிடந்தது. அந்த இரவில் இயற்கை தன் வனப்பையெல்லாம் அள்ளிச் சொரிந் திருந்தது.

கடலிலிருந்து வந்து கொண்டிருந்த காற்று சாளரத்தின் மீதிருந்த பூங்கொடியை அசை த்ததால் பூங்கொத்தொன்று கடாரத் துப் பூங்கொடியின் நுதலை ஒரு முறை முத்தமிட்டுச் சென்றது. இயற்கையின் அந்தப் பெரும் கவர்ச்சி அவள் சம்பந்தப்பட்டவரை பயனற்றதாயிற்று. துன்பமும் கவலையுமே அவள் இதயத்தைச் சூழ்ந்து கிடந்தது.

திடீரென அவள் மனத்தில் காதல் அறுபட்டுக் கவலை புகுந்து கொண்டு விட்டதை அவள் நின்ற நிலையிலிருந்தே புரிந்துகொண்ட இளைய பல்லவன், அதன் காரணத்தை மட்டும் அறிய முடியாததால் அவளை அணுகி அவள் தோள்மீது தன் கரமொன்றைப் பொருத்தி, "காஞ்சனா" என்று ஆறுதலை அள்ளிச் சொரிந்த குரலில் அழைத்தான்.

"ஹூம்" இந்தப் பதில்தான் வந்தது அவளிடமிருந்து, குரலில் துன்பம் மண்டிக் கிடந்தது. "ஏன் திடீரென இங்கு வந்து விட்டாய்?" என்று மீண்டும் வினவினான் இளையபல்லவன்.

"ஒன்றுமில்லை" வெடுக்கென்று வந்தது அவள் பதில். ஒன்றும் இல்லாவிட்டால் நீ அங்கேயே உட்கார்ந்திருப்பதுதானே?" ஆதரவுடன் கேட்டான் அவன்.

"இங்கு நின்றால் என்ன?"

"நிற்கலாம், நிற்கலாம்."

"அதுதான் நிற்கிறேன்."

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் இளையபல்லவன் திகைத்தான். இன்பம் அதிகமாகும் போதும் சரி, துன்பம் அதிகமாகும்போதும் சரி, பெண்கள் வெடுக்வெடுக்கென்று பேசுவார்களென்பதை மனோதத்துவ சாஸ்திரத்தில் அவன் கற்றிருந்தான். அன்று ஏட்டில் கற்றான், இன்று அமீரின் வீட்டில் கிடைத்தது. அந்த அனுபவம் வேறொன்றையும் உணர்த்தியது அவனுக்கு. அந்தச் சமயத்தில் அவள் அப்படிப் பேசியது துன்பம் போல் தோன்றியதே தவிர, அது இன்பத்தாலுமல்ல துன்பத்தாலுமல்ல, இரண்டும் கலந்த விபரீத நிலையால் என்பதை மட்டும் புரிந்து கொண்டான் சோழர்களின் படைத்தலை வன்.

பஞ்சணையில் தாங்களிருவரும் மௌனமாகக் கொஞ்சி நின்ற நிலைகளில் திடீரென ஏதோ ஒரு துயரத்தின் கதிர் அவள் இதயத்தில் பாய்ந்து விட்டதென்பதையும், அந்தத் துயரம் ஊடுருவிய இன்பநிலை அவள் இதயத்தைக் கலக்கி விட்டிருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்ட இளையபல்லவன் தன் உணர்ச்சிகளை [illegible] கட்டுக்குள் கொண்டுவந்து "காஞ்சனா! உன் மனோநிலை எனக்குப் புரிகிறது. உன் இதயத்தைத் திடீரெனத் துயரம் ஊடுருவியிருக்கிறது. அதன் காரணத்தை எனக்குச் சொல்லலாமா?" என்று குரலில் குழைவுடன் கேட்டான்.

காரணம் ஏதும் அவள் சொல்லவில்லை. "புதுத் துயரம் பாய என்ன இருக்கிறது? நாம் இருப்பதே துயரம் தோய்ந்த நிலைதானே?" என்று பொதுப்படையாகப் பதில் சொன்னாள்.

"உண்மைதான் காஞ்சனா! துயரம் ஆபத்து எல்லாமே நம்மைச் சூழ்ந்திருப்பது உண்மை. அதனால் தான் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் விபரீதமாகவும் நடந்து கொள்கிறோம்" என்று துக்கத்துடன் இளைய பல்லவனும் பேசினான்.

"அப்படி என்ன விபரீதமாக நடந்து கொண்டுவிட்டோம்?" இளைய பல்லவனைத் திரும்பிப் பாராமல் வெளியே பார்த்தபடியே கேட்டாள் காஞ்சனாதேவி.

"என்னிடம் கலக்காமல் எதையும் செய்து பழக்கமற்ற எனது இளவரசர் என்னைப் புறக்கணித்து அமீரைத் துணை கொண்டு ஆபத்து நிறைந்த பாலூருக்குள் செல்கிறார். அதனால் வேதனையடைந்த நான் அமைதி நாடி உன்னிடம் வருகிறேன்.

நீ என்னைத் திடீரென உதறி இந்தச் சாளரத்திடம் வருகிறாய். என்ன காரணம் என்று சொல்லவும் மறுக் கிறாய். எந்த இருவரிடம் என் உயிரையே வைத்திருக்கிறேனோ அந்த இருவரும் என்னிடம் நடந்து கொள்ளும் முறை விசித்திரமாயில்லையா" என்று வினவினான் இளைய பல்லவன்.

இதைக் கேட்ட காஞ்சனாதேவியின் உள்ளம் சிறிது நெகிழவே அவள் மெள்ளத் திரும்பினாள் அவனை நோக்கி "உயிர் நண்பரையும் என்னையும் நீங்கள் இப்படி எடை போடுவது சரியல்ல" என்று சொல்லவும் செய்தாள்.

"ஏன் சரியல்ல?" "அது நம்பிக்கையைக் குறிக்கவில்லை."

"உங்களிருவரிடம் எனக்கு நம்பிக்கையில்லை என்கிறாயா?"

"நம்பிக்கையிருக்கிறது. ஆனால் உங்கள் ஆசாபாசங்களை அறுக்கும் அளவுக்கு அந்த நம்பிக்கை வளரவில்லை. உங்கள் நண்பர் உங்களை விட்டுச் சென்றால் அதற்குக் காரணம் உதாசீனம் என்று நினைக்கின்றீர்கள். வேறு முக்கிய காரணம் இருக்கக்கூடும் என்று ஏன் நீங்கள் நினைக்கக் கூடாது.

அவர் போகுமிடம் நீங்கள் போகத் தகாததாயிருக்கலாம் என்று ஏன் முடிவு கட்டக்கூடாது? நமக்கு வேண்டியவர்கள் நம்மைச் சில அலுவல்களில் விலக்கும் போது அலுவல்களின் தன்மை அப்படியி ருக்கும் என்று ஏன் தீர்மானிக்கக்கூடாது? அதிருக்கட்டும். துயரத்தின் காரணத்தை நான் சொல்லவில்லையென்கிறீர்கள். சொல்லத் தகாததாயிருக்கலாம் என்று நீங்கள் ஏன் எண்ணக் கூடாது."

அவள் கேள்விகளில் உண்மை பெரிதும் ஒளிவிடுவதைக் கவனித்த இளையபல்லவன் ஏதும் பதில் சொல்லமுடியாமல் சில விநாடிகளில் திணறினான். பிறகு பேச முற்பட்டபோதும் "என்னிடம் சொல்லத்தகாதது என்ன இருக்க முடியும்... இத்தனைக்குப் பிறகும்?" என்று மெள்ள மெள்ள இழுத்து சங்கடத்துடன் பேசினான்.

இத்தனைக்குப் பிறகு என்று அவன் எதைக் குறிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாளாதலால் மெள்ளப் புன்முறுவல் செய்தாள். அந்த இன்பப் புன்முறுவலிலும் ஓரளவு துன்பம் தோய்ந்து கிடந்தது. அந்த இன்பப் புன்முறுவலைத் தொடர்ந்து உதிர்ந்த அவள் சொற்களில் காதலும் வருத்தமும் கலந்தொலித்தன.

"நாமிருவரும் அங்கே..." என்று கட்டிலைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

"ஆம், உட்கார்ந்திருந்தோம்..." என்று அவன் பூர்த்தி செய்தான் வாசகத்தை.

"நான் மெய் மறந்திருந்தேன்."

"நானும்தான்."

"அநபாயர் விட்டுப் போனதைக் குறித்து."

"நான் அமைதியளிக்க.. முயன்றேன்." "ஆம்."

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அவன்தான் மனிதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே
கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே
கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

மாதவிக் கொடிப் பூவின் இதழோரமே
மயக்கும் மதுச் சாரமே... ஏ...
மாதவிக் கொடிப் பூவின் இதழோரமே
மயக்கும் மதுச் சாரமே
மஞ்சள் வெயில் போலும் மலர் வண்ண முகமே
மன்னர் குலத் தங்கமே
பச்சை மலைத் தோட்டம் மணியாரமே
பாடும் புது ராகமே

அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே
கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

வெள்ளலை கடலாடும் பொன்னோடமே
விளக்கின் ஒளி வெள்ளமே... ஏ...
வெள்ளலை கடலாடும் பொன்னோடமே
விளக்கின் ஒளி வெள்ளமே
செல்லும் இடம் தோறும் புகழ் சேர்க்கும் தவமே
தென்னர் குல மன்னனே

இன்று கவி பாடும் என் செல்வமே
என்றும் என் தெய்வமே

மாநிலம் எல்லாமும் நம் இல்லமே
மக்கள் நம் சொந்தமே

கானும் நிலமெங்கும் தமிழ் பாடும் மனமே
உலகம் நமதாகுமே

அன்று கவி வேந்தன் சொல் வண்ணமே
யாவும் உறவாகுமே

அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே

கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

# கோயில்களில் காணிக்கையாக அளிக்கும் முடி என்ன ஆகிறது தெரியுமா?

இறைவனுக்கு செலுத்தப்படும் காணிக்கைகளில் மிகச் சிறந்த காணிக்கையாகக் கருதப்படுவது முடிக் காணிக்கை. மனிதருக்கு அழகு முடிதான். அதையே கொடுப்பதால் நம்முடைய அகந்தை அகன்று, அடக்கம் பிறக்கிறது எனலாம்.

மேலும் முடி கொடுப்பதால் மனதில் உள்ள பாரமெல்லாம் இறங்கிவிடுவதாக மனப்பூர்வமாக நம்புகிறோம். முடி இறக்குவது உடல் நலனுக்கும் நல்லதும் கூட. உயிர் ஆற்றல் மேல் நோக்கி எழும்ப தலை முடியை நீக்கிக் கொள்வது நல்லது என்றும் ஆன்மிகம் கூறுகிறது.

ஒரு கிலோ முடி 80 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. முடியின் நீளம், வலு, நிறம் பொறுத்து விலை தீர்மானமாகிறது.

ஒரு பெண்ணின் வாழ்நாளில் அவர் தலையிலிருந்து சராசரியாக 283.5 கிராம் முடி கிடைக்கிறது. இது உலக சந்தையில் 20 ஆயிரம் ரூபாய் மதிப்புக் கொண்டதாம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இணையத்தளம் வழியே ஏல முறையில் முடி விற்பனை செய்கிறது. திருப்பதியில் ஆண்டுக்கு 500 தொன் முடிகள் பயன்படுகின்றன என்று கேள்விப்பட்டதும் அதிர்ந்து போனோம்.

அதில் சில...

திரவ உரங்கள் தயாரிக்கவும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறையிலும் கூட முடி பயன்படுகின்றன. தரமான பிரஷ்கள் தயாரிக்க, கட்டுமானத் துறையில் களிமண்/முடி கொண்ட கலவை ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகிறது. இது கட்டட விரிசலை அதிகம் கட்டுப்படுத்துகிறதாம்.

கடலில் இருந்து பெறப்படும் கசடு எண்ணெயை சுத்தப்படுத்தவும் எண்ணெய் - நீரை



பிரிக்கவும் மனித முடி பயன்படுகின்றன. வண்ணாங்கள் தயாரிக்கும் துறை, மருந்து தயாரிக்கும் துறையிலும் உலோக சுத்திகரிப்புத் துறையிலும் கூட முடியின் பயன்பாடு வியக்கத்தக்கது.

இப்படி நாம் காணிக்கை அளிக்கும் முடி என்னவாகிறது தெரியுமா? இதன் பின்னால் இருக்கும் வர்த்தகம் மிகவும் பிரமாண்டமானது.

நாம் கோயில்களுக்கு நேர்த்திக் கடனுக்காக முடிக் காணிக்கை செய்தாலும் இந்தியாவின் திருப்பதி, பழனி, திருத்தணி, திருசெந்தூர், திருவண்ணாமலை, சமயபுரம் போன்ற கோயில்களில் அதிக முடிக் காணிக்கை செய்யப்படுகின்றன.

உண்மையில் முடி வர்த்தகத்தில் இருக்கும் பண மதிப்பீட்டை அறிந்து கொண்டால் காணிக்கை முடியின் மதிப்பை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

கோயில்களில் காணிக்கையாக நாம் கொடுக்கும் முடி இணைய வர்த்தகத்தில் அபாரப் பண வரவை அளிப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

என்னதான் சலூன்களில் ஓரளவு முடிகள் திரட்டப்பட்டாலும் அங்கு பெருமளவு சேருவதில்லை. ஆனால் ஆலயங்களில் பெண்களும் முடிக் காணிக்கை கொடுப்பதால் அதிகமான அளவுக்கு முடி வர்த்தகப் பயன்பாட்டுக்கு வருகிறது. முன்பெல்லாம் சவுரி முடி [illegible] இப்போதைக்கு தரம் பிரித்த அளவுக்கு பக்தர்களால் முடிக் காணிக்கை வருகிறதாம். இதன்மூலம் ஆண்டுக்கு 300 முதல் 400 கோடி ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது என்கிறார்கள். முடிக்காணிக்கையின் மதிப்பு ஒட்டுமொத்த திருப்பதி கோயிலின் வருமானத்தில் 10 சதவிகிதம் என்பது குறிப்பிடத்தக்கது.

கூந்தல் பராமரிப்புத் துறையில் விக்குகள் தயாரிக்கும் தொழில் பல பில்லியன் டொலர்கள் மதிப்புக் கொண்டதாகும்.

சர்வதேச அளவில் முடி வர்த்தகத்தின் மதிப்பு ஒரு ஆண்டுக்கு சுமார், 250 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வரை செல்லும் எனப்படுகிறது. இதில் இந்திய முடியில் தயாரான விக்குகள் பெரும் மதிப்புக் கொண்டவை.

விக் தயாரிக்க மட்டுமல்ல, ஹேர் எக்ஸ்டென்சன் எனப்படும் செயற்கையாக முடியை நடும் தொழிலிலும் இயற்கை முடியைப் பயன்படுத்துகிறார்கள். இதற்குப் பயன்படுத்தப்படும் தரமான உயர்வகை முடியின் விலை கிட்டத்தட்ட 3 ஆயிரம் பவுண்ட் வரை விலையாகிறது.

முடி பயன்படாத துறைகளே இல்லை எனும் அளவுக்கு எல்லாத் துறையிலும்

மாறிவரும் உடை அலங்கார நவீன உலகில் உடைகள் தயாரிக்கவும் முடி பயன்படுகின்றது. மேலை நாடுகளில் வீட்டு அலங்காரப் பொருட்கள், இருக்கை போன்ற உபயோகப் பொருட்களிலும் முடிகள் பயன்படுகின்றன.

வளர்ப்பு பிராணிகளின் கூடுகள், கைப்பைகள் என பல விதங்களிலும் முடி பயன்படுகின்றன. பொம்மைகள் தயாரிப்பு, அலங்கார கயிறுகளாகவும் குதிரை ஏற்றம் போன்ற பொழுது போக்கு அம்சங்களில் பயன்படுகின்றன.

சொன்னால் நம்புவீர்களா? சீனா போன்ற நாடுகளில் உணவு உற்பத்தியில் கூட மனித முடிகள் பயன்படுகின்றன. குறிப்பாக விதவிதமான சோஸ்கள் தயாரிக்க பயப்படுகின்றனவாம். அதிக புரதம் கொண்டிருக்கும் முடிகள், அமினோ அமிலங்களை உருவாக்குவதையும் தடுக்கும் ஆற்றல் கொண்டவை. இதனால்சோயா சோஸ்போன்ற உணவு பொருட்கள் தயாரிக்க பெரிதும் உதவுகின்றனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கதைக்களம்

ரவுடிசத்தை தனது தொழிலாகவே கொண்டுள்ள நெப்போலியனுக்கு மகனாக பிறக்கிறார் கார்த்தி / சுல்தான். பிரசவத்தின் நேரத்தில் குழந்தையை மட்டுமே காப்பாற்ற முடிந்ததால், தன் தாயை தனது பிறப்பிலேயே கார்த்தி இழக்கிறார்.

தாயில்லாமல், 100 அடியாட்களிடம் வளரும் கதாநாயகன் / சுல்தான், அவர்கள் அனைவரையும் தனது சொந்த அண்ணனாக பார்க்கிறார். வெளிநாட்டில் வேலை செய்து வரும் கார்த்தி விடுமுறையில் தனது சொந்த ஊருக்கு வருகிறார்.

அதே சமயத்தில் தனது கிராமத்தை வில்லன் ஜெயசீலனிடம் இருந்து, நீங்கள் காப்பாற்றி தரவேண்டும் என்று நெப்போலியனிடம், பொன்வண்ணன் / விவசாயி கேட்க, காப்பாற்றி தருகிறேன்




என்று நெப்போலியனும் வாக்களிக்கிறார்.

இதன்பின், பொலிஸ் அதிகாரியின் மூலம் கார்த்தியின் வீட்டிற்குள் **Food Delivery** ஆட்களாக புகுந்து, நெப்போலியன் உள்ளிட்ட 5 நபர்களுக்கு துப்பாக்கி சூடு நடக்கிறது. இதனால் ரவுடி கூட்டத்தில் நான் இருக்கமாட்டேன் என்று ஊரைவிட்டு கார்த்தி கிளம்பும் நேரத்தில், அந்த மனவருத்தத்தில் உயிரை விடுகிறார் நெப்போலியன்.

இதனால் தனது தந்தைக்கு பிறகு, தன்னை தூக்கி வளர்ந்த அண்ணன்களை பார்த்துக்கொள் வேண்டும் என்று, பொலிஸ் அதிகாரியிடம் சென்று, 100 பேரையும் திருத்த 6 மாதம் அவகாசம்



கேட்கிறார் கார்த்தி.

ஆனால் தனது தலைவன் நெப்போலியன், கிராமத்தை காப்பாற்றி தருவேன் என்று விவசாயி பொன்வண்ணனிடம், கொடுத்த வாக்கை காப்பாற்ற கார்த்தியிடம் பொய் சொல்லி, பொன்வண்ணனின் ஊருக்கு, கார்த்தியின் சில ரவுடிகள் கிளம்புகிறார்கள். அவர்களுடன் உண்மையை அறியாமல் கார்த்தியும் செல்கிறார்.

ஆனால் அந்த ஊருக்கு சென்ற சில அசபாவிதங்கள் நடக்க, கார்த்திக்கு அனைத்து உண்மைகளும், தெரியவருகிறது. அதன்பின் எப்படி அந்த கிராமத்தை வில்லனிடமிருந்து கார்த்தி காப்பாற்றுகிறார், அங்கு சந்திக்கும் தனது காதலி, ருக்குமணி- ரஷ்மிகா மந்தனாவை எப்படி கரம்பிடிக்கிறார் என்பது தான் படத்தின் மீதிக் கதை.



காதலிக்க நேரமில்லை எனும் சீரியல் மூலம் அறிமுகமான பிரஜின் மற்றும் தலையணைப்பூக்கள் சீரியல் சாண்ட்ரா தம்பதியரின் இரட்டைப் பெண் குழந்தைகளான மித்ரா– ருத்ரா ஆகியோரின் இரண்டாவது பிறந்த தினப் புகைப்படம்



பாரதி கண்ணம்மா மற்றும் பாண்டியன் ஸ்ரோர்ஸ் புகழ் காவ்யாவின் லேட்டஸ்ட் போட்டோ ஷூட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்ட நாயகன் தாஹிர்

"சஹார் ஓவர் முடிந்ததும் ஓடத் தொடங்கியவர், டோனியைத் தாண்டி ஸ்டம்ப் அருகில் போயிருந்தார். திடீரென்று என்னவோ யோசித்தவர், திரும்பி பின்னால் ஓடி வந்தார். ஹர்பஜன் ஓவர் என்பதால் ஹெல்மெட் எடுக்க மெதுவாக நடந்து போய்க் கொண்டு இருந்தார் டோனி.."

இம்ரான் தாஹிர்... உசேன் போல்ட் ஓட்டத்தை ரசிக்காதவர்கள்கூட இவருடைய ஓட்டத்தை நிச்சயம் ரசிப்பார்கள். விக்கெட் எடுத்துவிட்டு அப்படியே கிரவுண்டுக்குள் இவர் ஓடும் ஓட்டத்தைப் பார்க்க அவ்வளவு உற்சாகமாக இருக்கும். ஒலிம்பிக்கில் 200 மீற்றர் ஸ்பிரின்ட் ஓடுவதுபோல் ஓடிக்கொண்டு இருப்பார் மனிதர். தன்னுடைய ஓட்டத்தாலேயே சிஎஸ்கே ரசிகர்களுக்கு செல்லப்பிள்ளையும் ஆகிவிட்டார் அவர். பராசக்தி எக்ஸ்பிரஸ் என்று நாமும் இவரைக் கூப்பிட்டு, கொண்டாட ஆரம்பித்துவிட்டோம்.



கிரவுண்டில் இவர் ஆடுவதைப் பார்க்கும்போது அவ்வளவு எனர்ஜெட்டிக்காக இருக்கும். சர்வதேச அரங்கில் ஓய்வு பெற்றுவிட்ட ஒரு வீரரைப் போலவே இருக்காது. ஓடிக்கொண்டே இருப்பார். சி.எஸ்.கே.-வை **uncle's army** என்று கலாய்க்கலாம். ஆனால், அதில் இருக்கும் மிகவும் யூத்ஃபுலான ஆள் தாஹிராகத்தான் இருப்பார். ஒரு சம்பவம் சொன்னால், அது எந்த அளவுக்கு உண்மை என்று புரியும்.

மே 1, 2019 - சி.எஸ்.கே.- டில்லி கேபிடல்ஸ் அணிகள் மோதிய ஆட்டம் சேப்பாக்கத்தில் நடந்தது. அதற்கு முந்தைய மும்பை இந்தியன்ஸ் அணியுடனான போட்டியில் சுப்பர் கிங்ஸ் கப்டன் டோனி விளையாடவில்லை. முதுகு வலியின் காரணமாக அவர் ஓய்வெடுத்துக்கொண்டார். டில்லி அணியுடனான போட்டியில் மீண்டும் களமிறங்கினாலும் அவர் முழு பிட்னஸோடு இல்லை. சற்று களைப்பாகவே காணப்பட்டார். பட்டிங் செய்தபோது 22 பந்துகளில் 44 ரன்கள் குவித்தார். ஆனால், எப்போதும் வெறித்தனமாக விக்கெட்டுகளுக்கு இடையே ஓடும் எம்.எஸ். அன்று ஒரேயொரு டபுள் தான் எடுத்தார்.

அடுத்து டில்லி பட்டிங். தீபக் சஹார் பெவிலியன் எண்டில் இருந்தும், ஹர்பஜன் சிங் பட்டாபிராமன் கேட் எண்டில் இருந்தும் முதல் ஸ்பெல் வீசினார்கள். தீபக் சஹார் ஓவர் போடும்போது தேர்ட் மேன் பொசிஷனிலும் ஹர்பஜன் ஓவரின்போது ஃபைன் லெக் திசையிலும் ஃபீல்டிங் செய்துகொண்டிருந்தார் தாஹிர். ஃபாஸ்ட் பௌலர், ஸ்பின்னர் என்று மாறி மாறி வீசியதால், கிரவுண்ட்டில் ஹெல்மட்டையும் வைத்திருந்தார் டோனி.

ஒரு தீபக் சஹார் ஓவர் முடிந்தது. அடுத்து ஹர்பஜன் ஓவர். இப்போது எண்ட் மாறவேண்டும். டோனி பெவிலியன் எண்ட் பக்கம் போகவேண்டும். ஃபைன் லெக்கில் ஃபீல்டிங் என்பதால், **இப்போது தாஹிரும் அந்தப் பக்கம் போகவேண்டும். சஹார் ஓவர் முடிந்ததும் ஓடத் தொடங்கியவர், டோனியைத் தாண்டி ஸ்டம்ப் அருகில் போயிருந்தார்.** திடீரென்று என்னவோ யோசித்தவர், திரும்பி பின்னால் ஓடி வந்தார். ஹர்பஜன் ஓவர் என்பதால் ஹெல்மட் எடுக்க மெதுவாக நடந்து போய்க்கொண்டு இருந்தார் டோனி.

அவருக்கு ஏற்கனவே முதுகு வலி. இதில் குனிந்து வேறு ஹெல்மெட் எடுக்க வேண்டுமே. அதற்கு அவர் சிரமப்படாமல் இருப்பதற்காக, ஹெல்மெட் எடுத்துக் கொடுக்கத்தான் திரும்ப ஓடி வந்திருக்கிறார் அவர். டோனி 4 அடி வைப்பதற்குள் திரும்ப ஓடிவந்து ஹெல்மெட்டை எடுத்து அவர் கையில் கொடுத்துவிட்டு, டோனியின் முகத்தைக்கூடப் பார்க்காமல் ஃபைன் லெக் திசை நோக்கி ஓடினார் தாஹிர்.

இதுதான் தாஹிர்... டோனியைவிட அவருக்கு 2 வயது அதிகம். ஆனால், ஏதோ. ஒரு சின்னப் பையன் போல் வந்து ஹெல்மெட் எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனார். இந்த ஒரு விடயம் போதும் மனதளவில் அவர் எவ்ளோ யூத்ஃபுல்லாக இருக்கிறார் என்பதைக் காட்ட.



# கோடி சொத்திருக்கிறது அணியில் இடமில்லை

கோடிக்கணக்கில் பணம் இருந்தும் 20 வயதிலேயே ரஞ்சி அணியில் விளையாட இடம் கிடைத்தும், ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக ஐ.பி.எல். தொடரில் விளையாடத்தேர்ந்தெடுக்கப் பட்டும் "கிரிக்கெட்டே வேண்டாம்" என ஓராண்டுக்கும் மேலாக விலகியிருப்பவர்தான் ஆர்யமான் விக்ரம் பிர்லா!

### யார் இந்த ஆர்யமான்?!

1997 இல் பிறந்த 23 வயது கிரிக்கெட் வீரர் ஆர்யமான் விக்ரம் பிர்லா. 7000 கோடிக்கும் அதிகமான சொத்து மதிப்புக்கொண்ட பிர்லா குழுமத்தின் குமார் மங்கலம் பிர்லாவின் ஒரே மகன்தான் இவர். கிரிக்கெட் வீரராக வேண்டும் என சிறுவயதில் இருந்து பயிற்சிகள் மேற்கொண்டு கிரிக்கெட் வீரராகவும் உருவெடுத்த ஆர்யமான் பிர்லா 2016-17 சீசனில் மத்திய பிரதேச ரஞ்சி அணிக்குள் இடம்பிடித்தார்.

பிர்லாவின் மகனாகவே இருந்தாலும் முதல் சீசனில் கடைசி லீக் போட்டியில் அதாவது ஒடிசாவுக்கு எதிரானப் போட்டியில்தான் அவருக்கு விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. முதல் இன்னிங்ஸில் 67 பந்துகள் சந்தித்து 16 ரன்கள் அடித்தவர், இரண்டாவது இன்னிங்ஸில் 6 ரன்களில் இருக்கும்போது துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட் ஆனார். அடுத்த வாய்ப்புக்கு அவர் ஓராண்டு காத்திருக்க வேண்டியிருந்தது.

இடது கை ஓப்பனிங் பட்ஸ்மேனான ஆர்யமான் பிர்லா அதிரடி ஆட்டம் ஆடக்கூடியவர் அல்ல. ராகுல் டிராவிட்டின் ஆட்டமுறையைப் பின்பற்றி அவரைப் போல நிதானமான ஆட்டம் ஆடுபவர். 2018-19 சீசனின் முதல் போட்டியில் தமிழ்நாட்டுக்கு எதிராக ஆடும் வாய்ப்பு ஆர்யமான் பிர்லாவுக்குக் கிடைத்தது.

166 பந்துகளை சந்தித்தவர் ஃபர்ஸ்ட் கிளாஸ் கிரிக்கெட்டில் தனது முதல் அரைசதத்தை அடித்தார். 51 ரன்களில் இருந்தபோது ரவிச்சந்திரன் அஷ்வினின் பௌலிங்கில் அவுட் ஆனார். முதல் போட்டியில் தவறவிட்ட சதத்தை இரண்டாவது போட்டியில் வங்காள அணிக்கு எதிராக அடித்தார் ஆர்யமான். இப்போட்டியில் வங்காள அணி முதல் இன்னிங்ஸில் 510 ரன்கள் குவித்து, மத்திய பிரதேச அணிக்கு தோல்வியைப் பரிசளிக்கக் காத்திருந்தது. முதல் இன்னிங்ஸில் ஆர்யமான் பிர்லாவும் 12 ரன்களில் ஆட்டம் இழக்க, மத்தியபிரதேசம் 335 ரன்களில் ஓல் அவுட் ஆகி ஃபாலோ ஆன் ஆனது. ஆனால், இரண்டாவது இன்னிங்ஸில் 189 பந்துகளில் 103 ரன்கள் குவித்து இறுதிவரை நொட் அவுட் பட்ஸ்மேனாக களத்தில் நின்று மத்திய பிரதேசத்தின் ஹீரோவானார் ஆர்யமான். ஆனால், இதற்கடுத்த போட்டிகளில் ஆர்யமானால் 30 ரன்களுக்கு மேல் தாண்ட முடியவில்லை. மத்திய பிரதேச அணியும் லீக் சுற்றோடு வெளியேறியது.

இந்நிலையில்தான் 2019 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல்.ஏலம் 2018 நவம்பரில் நடந்தது. இந்த ஏலத்துக்கு சில நாட்களுக்கு முன்னர்தான் ரஞ்சி கோப்பையில் சதம் அடித்திருந்தார் ஆர்யமான். 20 இலட்சம் ரூபாய் அடிப்படைத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டவரை 30 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது ராஜஸ்தான் ராயல்ஸ். இந்த அணியின் முக்கிய ஸ்பொன்சர் ஒரு சீமெந்து நிறுவனம். இது பிர்லா குழும நிறுவனம் என்பதால்தான் ஆர்யமானை அணிக்குள் எடுத்திருக்கிறார்கள் என்கிற பேச்சுகள் அப்போது கிளம்பியது. 2019 சீசனில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தாலும் ஒரு போட்டியில்கூட விளையாட இடம் கிடைக்காத ஆர்யமான், 2019 டிசெம்பரில் கிரிக்கெட்டைவிட்டே விலகுவதாக அறிவித்தார்.

"ஒரு வலைக்குள் அடைபட்டுவிட்டதாக உணர்கிறேன். கிரிக்கெட் தொடர்பான விடயங்கள் என்னைப் பதற்றத்துக்குள்ளாக்குகின்றன. மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. என்னால் முயன்றவரைப் போராடிப்பார்த்தேன். ஆனால், இப்போதைக்கு எல்லாவற்றையும்விட என்னுடைய மனநலனே முக்கியம் என்பதால் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வெடுக்கிறேன். நல்ல ஆரோக்கியத்துடன் மீண்டும் விளையாட வருவேன் என நம்புகிறேன்" என அப்போது அறிவித்திருந்தார் ஆர்யமான் பிர்லா.

ஓராண்டுக்கு மேலாகியும் அவர் இன்னும் கிரிக்கெட் பிட்சுக்குத் திரும்பவில்லை. தந்தையுடன் சேர்ந்து பிர்லா குழும தொழில்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார் ஆர்யமான் விக்ரம் பிர்லா.

ஆர்யமான் பிர்லாவைப்போலவே இந்தாண்டு மும்பை இந்தியன்ஸ் அணிக்குள் எடுக்கப்பட்டிருக்கும் அர்ஜுன் டெண்டுல்கர் ஏராளமான விமர்சனங்களை எதிர்கொண்டுவருகிறார். "என்னை விமர்சனம் செய்யுங்கள். ஆனால், என் மகனைத் தொந்தரவு செய்யாதீர்கள். அவனை விளையாட்டில் கவனம் செலுத்த விடுங்கள்" எனத்தொடர்ந்து மகனுக்காக கெஞ்சி வருகிறார் சச்சின் டெண்டுல்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டோன் ஹேன்ஞ் (இங்கிலாந்து)


பண்டைய அதிசயங்கள் என்று ஆண்டிபாட்டர் தொகுத்த பட்டியலில் கிஸா பிரமிடுகள் தவிர ஏனைய இடங்கள் இயற்கைச் சீற்றங்களாலும் மற்ற தேசத்தினரின் படையெடுப்புகளாலும் அழிந்துவிட்டன. இதனால் கோபெம்ப்ரூவர் என்கிற படைப்பாளி வெளியிட்ட புதிய பட்டியலில் முதன் முதலாக இடம்பிடித்தது ஸ்டோன் ஹேன்ஞ். இங்கிலாந்தில் உள்ள வில்ட்ஷயர் மாகாணத்தில் அமெஸ்பரிக்கு 3.2 கி.மீ.தெற்கே சாலிஸ்பரிக்கு வடமேற்கு திசையில் சுமார் 13 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது ஸ்ரோன் ஹேன்ஞ்.

இற்றைக்கு சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வெறும் மனித உழைப்பாலேயே உருவாக்கப்பட்ட இந்த இடம் மிகச் சரியாக யாரால் எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு எவ்வித மான எழுத்துப்பூர்வமான ஆதாரமுமில்லை. மிக அதிக எடை கொண்ட கற்களாலும் மணல் முகடுகளாலும் உருவாக்கப்பட்ட ஸ்ரோன் ஹேன்ஞ் பார்ப்பதற்கு நம் ஊரில் உள்ள சுமை தாங்கி கற்களைப் போல் உள்ளது.

பல்வேறு தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று அறிஞர்கள் கருத்துப்படி ஸ்ரோன் ஹேன்ஞ் ஒரே நேரத்தில் கட்டி முடிக்கப்பட்ட இடம் இல்லை என்பது தெரிகிறது. கி.மு.3 ஆயிரத்திற்கும் கி.மு.2500 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்கப்பட்டிருக்கலாம். இரண்டு உயரமான கற்களை நிற்க வைத்து அதன் மேல்பகுதியில் குறுக்கே ஒரு கல்லை வைத்து சுற்றிலும் மண் முகடுகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அன்றைக்கு வாழ்ந்த மக்களின் புகழ்பெற்ற தலைவர்களின் கல்லறை என்பதாக ஒரு கருத்தும் இல்லை அது செல்டிக் மக்களின் வழிபாட்டுத்தலம் என்பதாகவும் இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.


சார்சென்கள் என்று அழைக்கப்படும் ஒருவகை கற்கள் சராசரியாக 30 அடி (9 மீ) உயரமும் 25 தொன் எடையும் கொண்டவை. இவை ஸ்ரோன் ஹேன்ஞ் இருக்கும் இடத்திலிருந்து 32 கி.மீ. தொலைவிலுள்ள மால்பரோ மலைச் சரிவிலிருந்து எடுத்து வரப்பட்டவை. நீலக்கற்கள் எனப்படும் மற்றொரு வகை அபூர்வக் கற்கள் அங்கிருந்த 250 கி.மீ.தொலைவிலுள்ள மேற்கு வேல்ஸ் எனும் ஊரிலிருக்கும் ப்ரெஸ்லி மலையிலிருந்து எடுத்து வரப்பட்டவை. (தொடரும்)



ஸ்டோன் ஹேன்ஞ் கட்டடப்பணிகள் அந்தக்காலத்தில் எப்படி நடந்திருக்கலாம் என்பதை விளக்கும் வரைபடம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2273

**நர்மதன்**




**காவியா**




**வரதன்**




**விக்னா**




**மதனா**




**றம்சன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 248

## ஆட்டிசம் என்ற நிலைமையுடைய குழந்தைகளை சமுதாயத்தில் எப்படி அடையாளம் காணலாம்?

**ஆட்டிசம் (Autism) என்றால் என்ன?**

நரம்புத் தொகுதியில், முக்கியமாக மூளை விருத்தியில் ஏற்படுகின்ற அசாதாரண மாற்றத்தால் அல்லது குழப்பத்தால் உருவாகும் இந்த நிலைமை பின்வரும் அறிகுறிகளைக் கொண்டிருக்கும்.

1. பேச்சு வன்மையில் தடங்கல் அல்லது பாதிப்பு.
(Impaired communication).
2. சமூகத் தொடர்பாடலில் பாதிப்பு.
(Impaired social interaction)
3. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவு.
(Repetitive movements).

**ஆட்டிசம் என்ற நிலைமை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

இன்று வரை அடிப்படைக் காரணம் என்னவென்று தெரியாது.

ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

பரம்பரை அலகுகளில் வரும் மாற்றம் (Gene mutation) என்று சந்தேகிக்கப்படுகிறது.

தடுப்பூசிகள் (Vaccines) இந் நிலைமைக்கு காரணம் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இந்நிலைமையுடைய குழந்தைகளை சமுதாயத்தில் எப்படி அடையாளம் காணலாம்?**

குழந்தைகளுக்கு உடலில் வெளிப்படையாக எந்தப் பாதிப்பும் இருக்காது. இவர்களின் நடத்தையை உற்று நோக்குதலின் மூலம் குறைபாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

**எடுத்துக்காட்டாகப்**

1. பிறரோடு கண்ணோக்கிப் பேசுவதில் சிக்கல். இருத்தல் (Poor eye contac)
2. தன் வயதொத்தவர்களுடன் நட்புணர்வு கொள்வதிலும் சமூகத் திறன்களை வெளிக்காட்டுவதிலும் ஈடுபாடற்று இருத்தல்.
3. பிறருடன் பொருந்திச் செல்லாமல் தனித்து இருத்தல் (உணவு, விளையாட்டு போன்றன).
4. பேச்சுத் திறனற்று இருத்தல் அல்லது சொல்லியவற்றை மீண்டும் மீண்டும் சொல்லுதல்
5. அன்றாட வேலைகளில் ஏற்படும் சிறு மாற்றத்தைக் கூட எதிர்கொண்டு சமாளிப்பதில் சிக்கல் இருத்தல்.
7. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவுகள். (Stimming)
8. பரபரப்பான சத்தம் நிறைந்த சூழல்களில், (எடுத்துக்காட்டாக, விளையாடுமிடம்) மிகவும் படபடப்புடன் காணப்படுதல்.
9. சிலருக்கு சிலவகைத் துணிகள் அணிவதிலோ அல்லது தங்கள் உடல் மேல் உடை உராயும் போதோ சிரமம் ஏற்படுதல்.



**எப்படி இந்த நிலைமையைக் கண்டு பிடிப்பது?**

(Diagnosis)

இருக்கும் பல விதமான முறைகள் வினா கொத்தை அடிப்படையாகக் கொண்டவை.

குழந்தை நல மருத்துவர், மன நோய் மருத்துவர், மனோதத்துவ நிபுணர் கொண்ட குழு இந்த நிலைமையை இனங்காணுவர்.

இந்த நிலைமையை அடையாளம் காண சிறப்புப் பரிசோதனைகள் (Special tests) கிடையாது.

**தாய் கர்ப்பமாக இருக்கும் போதே கருவில் இந்த நிலை மையை கண்டுபிடிப்பதற்கு சோதனைகள் இருக்கின்றதா?**

இன்னும் இல்லை.

**எந்த வயதில் இந்த நிலைமை இனங் காணப்படுகிறது?**

இந்நிலைமையுடைய குழந்தைகளின் அடையாளங்கள் முதல் மூன்று வயதிற்குள் வெளிப்படும்.

ஆனால் பிள்ளைகளின் வளர்ச்சிப்படி நிலைகளில் ஏற்படும் கவலைக்கிடமான தாமதங்களையும் கருத்திற் கொண்டு இடையீடுகளைக் (Interventions) காலதாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்.

**பிள்ளைகள் எந்த விகிதத்தில் பாதிக்கப்படுகிறார்கள்?**

அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையத்தின் (CDC) 2014 ம் ஆண்டு புள்ளி விபரத் தரவுகளின் படி 68 குழந்தைகளில் ஒரு குழந்தை நிலைமையால் பாதிக்கப்படுகிறது.

இந்நிலைமை பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளில் ஏறத்தாழ 5 மடங்கு அதி கமாகக் காணப்படுகிறது.

**இந்த நிலைமையை பூரண மாகக் குணப்படுத்துவதற்கு மருந்து உள்ளதா?**

இது நோயல்ல. மருந்துகளால் குணப்படுத்த முடியாதது. இது வாழ் நாள் வரையில் நீடிக்கும் நிலைமையாகும்.

ஆனால் இடையீடுகள் உள் து. இவ்விடையீடுகளை காலதாமதமின்றி ஆரம்பித்தால் நிலைமை கடினமாவதைத் தடுத்து இக்குழந்தைகளும் ஓரளவுக்கேனும் சாதாரண குழந்தைகள் போல் செயற்பட வாய்ப்புகள் உள்ளன.

**எந்த வயதில் இந்த இடையீடுகளைத் தொடங்க வேண்டும்?**

இடையீடுகளை காலதாமதமின்றி, நிலைமையை அடையாளம் கண்டவுடன் தொடங்க வேண்டும்.

**எப்படியான இடையீடுகள் (Interventions) பரிந்துரைக்கப்பட்டுள்ளன?**

பின்வரும் இடையீடுகள் இக் குழந்தைகளை சமுதாயத்துடன் ஒத்து வாழ்வதற்கு உதவி செய்வதாக ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

1. பிரயோக நடத்தைப் பகுப்பாய்வு (Applied behavior analysis).
2. தொழில் சிகிச்சைப் பயிற்சியும் உணர்ச்சி ஒருங்கிணைப்பும். ((occupational therapy and sensory integration).
3. பேச்சு சிகிச்சைப் பயிற்சி (speech therapy).
4. உடல் சிகிச்சைப் பயிற்சி (physical therapy).

**இப்படியான இடையீடுகளை எப்படித் தொடங்க முடியும்?**

இடையீடுகளைத் தொடங்குவதற்கு பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களின் உதவியை நாடலாம்.

இதற்கு வைத்தியரின் மதிப்பீடும் பரிந்துரையும் தேவை.

**இப்படியான இடையீடுகளை எங்கு தொடங்க முடியும்?**

இந்நிலைமைக்கான சிகிச்சையை வீடுகளிலும், பாடசாலைகளிலும், "மாதவம்" போன்ற சிறப்புப் பயிற்சி நிலையங்களிலும் தொடங்கலாம், தொடரலாம்.

Dr.காவேரி சிவரூபன் U.S.A,
Dr.சிவாணி பத்மராஜா U.S.A

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org